உ

கடவுள் துணை.


# செந்தமிழ்

தொகுதி-கச.] நள ௵ புரட்டாசி ௴ [பகுதி-கக.

Vol. XIV. September—October, 1916. No. 11.


## தமிழ் நாடுகள்.

இது, தஞ்சை ராவ்பகதூர் மகா-ள-ள-ஸ்ரீ

K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களது உதவிபெற்று எழுதப்படுகிறது.

### முற்பகுதி.

குமரிக்குத்தென்றிசைக்கண் நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளிருந்தனவென்றும், ஆங்குத் தென்மதுரையெனப்பட்டதோர்நகரத்தில் முன்னர்த் தலைச்சங்கமும், பின்னர்க் கபாடபுரமெனப்பட்ட மற்றொருநகரத்தில் இடைச்சங்கமுமிருந்தனவென்றும், அவற்றைக் கடல்கொண்டபின் பாண்டியர்கள் கூடன்மதுரையைத் தமது தலைநகராக்கிக் கடைச்சங்கத்தை அதன்கண் இருத்தினரென்றுங் கூறுவார் சிலர். முதலில் தென்மதுரையிலும், அதனைக் கடல்கொண்டபின்னர்க் கபாடபுரத்திலும், அதனையுங் கடல்கொண்டபின்னர்க் கூடன்மதுரையிலும் பாண்டியர்களுஞ் சங்கப்புலவர்களுமிருந்துவந்தனரென்றுங் கூறுவார்சிலர். முந்தியவர்கள் ஒருகடல்கோளையும் பிந்தியவர்கள் இரண்டு கடல்கோள்களையுங்கூறுவது அவர்தம்முட் பேதம். இக்கதைகள் பழையநூல்களினால் எவ்வளவுமட்டில் ஆதரிக்கப்படுகின்றனவென்பதை இங்காராய்வாம்.

இக்காலத்துள்ள தமிழ்நூல்களுள் மிகப்பழமையானது தொல்காப்பியமென்பர். அதனை யாவரும் உயர்ந்தநூலென மதிக்கின்றனர். அது தலைச்சங்ககாலத்துக் கடல்கொண்டமதுரையிலியற்றப்பெற்றதெனச் சிலரும், இடைச்சங்ககாலத்துக் கபாடபுரத்திலியற்றப்பெற்றதென வேறுசிலருங் கூறுகின்றனர். கடல்கொண்ட மதுரையுங் கபாடபுரமும் குமரியின் தென்றிசைப்பாலனவாய தமிழ்நாடுகளிலிருந்தவையாதலின் ஆங்கே அந்நூல் புலப்பட்டதென்பது அவர்களதுகொள்கையாம்.

*

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனாரியற்றிய சிறப்புப்பாயிரத்தில், தமிழுலகத்திற்கு "வடவேங்கடந் தென்குமரி, யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து" எனக் குமரியே தெற்கெல்லையாகக்கூறப்பட்டுள்ளது. அதற்குரையெழுதிய இளம்பூரணவடிகளும் நச்சினார்க்கினியரும் குமரியைக் குமரியாறெனக்கொண்டனர். பொருளதிகாரத்து மரபியலிற் கண்ட "வினையி னீங்கி விளங்கிய வறிவின்—" என்னுஞ் சூத்திரத்தினுரையிற் பேராசிரியர், இப்பாயிரத்திற்கண்ட 'வடவேங்கடந்தென்குமரி'யென்னுந் தொடர்மொழியையெடுத்துக்கொண்டு குமரியென்பதற்குக் குமரியாறெனவே பொருளுரைத்தார். சிவஞானமுனிவரும், பாயிரத்திற்கண்ட குமரியைக் குமரியாறெனக்கொண்டு "தெற்கட் குமரியாறாகலின் அதுவே யெல்லையாயிற்று" என்று பாயிரவிருத்தியில் வரைந்துள்ளார். சிலப்பதிகாரத்து வேனிற்காதையிலுள்ள "நெடியோன்குன்றமுந் தொடியோள்பௌவமும்" என்பதற் குரையெழுதிய அடியார்க்குநல்லாரும், "தொடியோள்-பெண்பாற்பெயராற் குமரியென்பதாயிற்று. ஆகவே தென்பாற்கண்ணதோர் ஆற்றிற்குப்பெயராம்" என்றனர். மேற்கண்ட உரையாசிரியர்களெல்லாரும் குமரியைக் குமரியாறெனக்கொள்ளச் சோழவந்தான் அரசஞ்சண்முகனாரொருவரே உரையாசிரியர்கருத்துக்குமாறாய்த் 'தென்குமரி'யென்பதற் கோர் புத்துரையெழுதினார். அவருரை இன்னதென்பதையும் அது சிறிது மேலாதென்பதையும் இதன் பிற்பகுதியிற்காணலாம்.

பனம்பாரனார் தமிழுலகத்திற்குக் குமரியாற்றைத் தெற்கெல்லையென்றுகூறியதனால் அக்குமரியாற்றிற்குத்தெற்கில் அவர்காலத்துத் தென்மதுரை கபாடபுரங்களடங்கிய தமிழ்நாடுகளாவது பாண்டியர்களாவது சங்கங்களாவது இருந்தனவெனக்கூறுதல் அவரதுகொள்கைக்கு முற்றும் முரணுவதெனத் தெளிவாகின்றது. அக்காலத்திற் குமரியாற்றிற்குத்தெற்கிலும் தமிழ்நாடுகளிருந்திருப்பின், அவர் அந்நாடுகளுக்குத்தெற்கிலிருந்த மலை யாறுமுதலியவற்றையேதெற்கெல்லையாகக்கூறியிருப்பாரன்றிக் குமரியாற்றினைக்கூறுதற்கு ஒருசிறிது மிடமில்லை. மேலேகண்டபடி குமரிக்குத்தென்றிசைக்கணிருந்ததெனக் கூறப்பட்ட மதுரையிலோ கபாடபுரத்திலோ தொல்காப்பியமியற்றியரங்கேற்றப்பெற்றதெனின், அது அரங்கேறியகாலத்திற் கூடவேயிருந்து சிறப்புப்பாயிரமியம்பிய பனம்பாரனாரும் ஆங்கேயிருந்திருத்தல்வேண்டும். அவர் குமரியாற்றிற்குத் தெற்கிலிருந்துகொண்டு

தமக்கு வடக்கிலிருந்தகுமரியைத் தமிழுலகத்திற்குத் தெற்கெல்லை யாகக்கூறினாரெனக்கொள்ளின் அஃது எவ்வாற்றானும் பொருந்துவ தன்று. ஆகவே வேங்கடத்திற்குத்தெற்கும் குமரியாற்றிற்குவடக்கு மானதோரிடத்துத் தொல்காப்பியம் புலப்பட்டதென்பதை இப்பாயி ரம் தெளிவாய்க்காட்டுகின்றது. தொல்காப்பியத்திற்கு ஆதியுரையா சிரியராகிய இளம்பூரணவடிகள், இப்பாயிரத்தினுரையில், "கடல் கொள்வதன்முன்பு பிறநாடுமுண்மையின், தெற்கும் எல்லைகூறப்பட் டது. கிழக்கும் மேற்கும் பிறநாடின்மையிற் கூறப்படாவாயின...... இவை யகப்பாட்டெல்லை" என்றுகூறியுள்ளார். இங்கு அவர் 'பிறநாடு' என்றது தமிழ்நாடல்லாத பிறநாடென்றே பொருள்படும். இதனால், தொல்காப்பியம்புலப்படுத்தியகாலத்திற் குமரியாற்றிற்குத்தெற்கி லிருந்தநாடு தமிழ்நாடன்றென்பது இளம்பூரணவடிகளதுகொள்கை யென்று தெற்றெனவிளங்கும்.

தொல்காப்பியர் தமிழுலகம்முழுதையும் பதின்மூன்றுநாடுகளாகப் பிரித்தாரென்று பின்வருமவற்றால் விளங்குகின்றது:—சொல்லதிகாரம் எச்சவியலிலே "அவற்றுள், இயற்சொற்றாமே - செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் - தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே" என்னுஞ்சூத்திரத்தில் இயற்சொல்லுக்கு இலக்கணங்கூறுமுகத்தானே அவர் செந்தமிழ்நிலத்தைக்காட்டியபின்னர், "செந்தமிழ் சேர்ந்த பன் னிரு நிலத்துங் - தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" என்னுஞ் சூத்திரத்தில், திசைச்சொல்லுக்கு இலக்கணங்கூறுமுகத்தானே செந் தமிழ்நிலஞ்சேர்ந்த பன்னிருநிலங்களையுங் காட்டியுள்ளார். அவரது கொள்கைப்படி தமிழ்கூறுநல்லுலகம்முழுதும், செந்தமிழ்நிலமும் அந் நிலஞ்சேர்ந்த பன்னிருநிலமுமாகப் பதின்மூன்றுநிலங்களையடங்கிய தென்பதாம். செந்தமிழ்நிலத்தைச்சார்ந்த பன்னிருநிலத்திற்கும் உரை யாசிரியர்கள் கொடுந்தமிழ்நிலமென்று பெயரிட்டிருக்கின்றனர். சங்க மும் பாண்டியர்களுமிருந்தநாட்டைச் செந்தமிழ்நாடென்றும் அதனை யடுத்துள்ள தமிழ்நாடுகளைக் கொடுந்தமிழ்நாடுகளென்று மவர்கள்கூறு கின்றனரென்பது. கொடுந்தமிழ்நாடுகளின்பெயர்களைத் "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி-பன்றி யருவா வதன்வடக்கு-நன்றாய சீத மலாடு புனனாடு செந்தமிழ்சே - ரேதமில் பன்னிருநாட் டெண்" என்னுஞ்செய்யுளுட்காண்க. (சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்

இந்நாடுகளின்பெயர்களைக்கூறுவதன்கண் இரண்டொருபேதங் காணப்படுகின்றது.) பின்னூலாராகிய நன்னூலாரும், இக்கொள்கையையேகொண்டாரென்பது பின்வரும் நன்னூற்சூத்திரங்களால் விளங்கும்:— "செந்தமி ழாகித் திரியா தியார்க்குந் - தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்", "செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினு-மொன்பதிற் றிரண்டிற் றமிழொழி நிலத்தினுந் - தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப." இலக்கணவிளக்கநூலாசிரியரதுமதமு மதுவேயாம். ஆகவே, தமிழுலகம்முழுதும் குமரியாற்றிற்குவடக்கிலுள்ள மேற்கண்ட பதின்மூன்றுநாடுகளேயாமென்பது ஆன்றோரதுடன்பாடென்றும், அதற்குத்தெற்கில், தமிழ்நாடுகளிருந்தனவென்பது அவர்களதுகொள்கைக்கு முழுதும் மாறுபட்டதென்றும் தெளியக்கிடக்கின்றது.

தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிக் கடைச்சங்ககாலத்துநூல்களென வழங்கிவரப்பெற்ற கலித்தொகையிலுஞ் சிலப்பதிகாரத்திலும் கடல்கோள்கூறப்பட்டுள்ளது. கலித்தொகைக்கண் முல்லைக்கலியில் நல்லந்துவனார் பாண்டியநாடு கடல்கொள்ளப்பட்டவதனைச்சொல்லியவாறு—

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்" என்பது.

இவ்வடிகளாற் பாண்டியனதுநாட்டி னோர்பகுதியைக் கடல் கொண்டதென்றும், அக் கடல்கொண்டபகுதிக்குக் குறைவின்றி அதற்குப்பிரதியாய்ப் பாண்டியன் உடனே சேரசோழர்களிடத்தினின்று நாடு பிடித்துக்கொண்டனனென்றும் அறியக்கிடக்கின்றது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துக் காடுகாண்காதையில்—

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள—"

எனக் கூறியுள்ளார். இதனால், பாண்டியனது பஃறுளியாற்றையுங் குமரிக்கோட்டையுங் கடல்கொண்டதெனத் தெரிகிறது. ஆகவே தலையிடைச்சங்கங்கள் குமரியாற்றிற்குத் தெற்கிலிருந்துள்ள பாண்டியநாட்டிலிருந்தனவென்பாரதுகூற்றிற்கு இவை ஒருசிறிதும் ஆதாரமாகாவென்பது தெளிவாய்விளங்கும்.

மேற்கண்ட சிலப்பதிகார அடிகளுக்கு அடியார்க்குநல்லா ரெழுதியவுரையில் " அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட் டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க்கூற்றமு மென்னுமிவற்றை இழந்தநாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வா னாக" என்றெழுதப்பட்டுள்ளது. கூற்றம் அல்லது நாடு பலசேர்ந்தது ஒரு வளநாடாகும், பல வளநாடுகள்சேர்ந்தது ஒரு மண்டலமாகும். இப்பொழுது தஞ்சாவூர்ஜில்லாவென்றுகூறப்படுவது, ஒருபொழுது பாண்டியகுலாசனிவளநாடு நித்தவிநோதவளநாடு க்ஷத்திரியசிகாமணி வளநாடு உலகுய்யக்கொண்டசோழவளநாடு இராஜேந்திரசிங்கவளநாடு அருமொழித்தேவவளநாடு இராஜாதிராஜவளநாடுமுதலிய பலவள நாடுகளாகப் பிரிந்திருந்தது. மேற்கண்டபடி பலகூற்றங்கள் அல்லது நாடுகள்சேர்ந்தது ஒருவளநாடாகுமென்றால் இரண்டுகூற்றமென்பது இப்பொழுது ஒருதாலூகாவென்று வழங்கும் நிலவளவிற்குமேற்படா தென்றுகொள்ளுத லமையும். இதனாற் குமரியாற்றிற்குத்தெற்கிற் பாண்டியனுக்குச் சிறிதுநாடிருந்து கடல்கொள்ளப்பட்டதெனக் காண் கிறோம்.

மேலும் கடைச்சங்கமிருந்ததாகக்கூறப்பட்டமதுரையைச் சங் கப்புலவராகிய சாத்தனார் மணிமேகலையில், 'தக்கணமதுரை'யென்றும், 'தக்கணப்பேரூர்' என்றும், 'தென்றமிழ்மதுரை' யென்றும் சொல்லி யிருக்கின்றார். இதனால், கடைச்சங்கமிருந்ததாகச்சொல்லப்படுகிற காலத்தில், 'தென்மதுரை'யென்று வழங்கப்பெற்றது கூடன்மதுரை யென்றும், வேறொருதென்மதுரையை அவ ரறியாரென்றும் விளங்கு கிறது. அம்மதுரையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரப்பதிகத்தினுள் 'அதிராச்சிறப்பின்மதுரைமூதூர்' என்றும், 'மதுரைமூதூர்' என்னு மிதனை, வேறிடங்களிலும் 'புறஞ்சிறைமூதூர்' 'திருமலிமூதூர்' என் றும், 'பொற்கொடிமூதூர்' 'நிலைகெழுகூடல்' 'பழவிறன்மூதூர்' என் றுங் கூறியிருக்கின்றார். இக்கூடன்மதுரை பாண்டியர்களுக்குப் புதிதா யேற்பட்ட தலைநகரமாயிருப்பின், 'பழவிறன்மூதூர்' என்புழி அதன் பழமையைக்காட்ட இரண்டு அடைமொழிகளைக் கொடுத்திருப்பாரா? 'நிலைகெழுகூடல்' என்பது புதிதாயுண்டாகியநகரத்தையோ குறிக்கும்?

மகா-ா-ா-ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள், சங்கப்புலவர்களுடைய பெயர்களைத் தாம் குறித்துப்பார்த்ததில் ஐஞ்ஞூற்றுப்பதினொன்றுக்குக் குறையாத வெவ்வேறுபெயர்கள் காணப்பட்டனவென்று சொல்லி

யிருக்கின்றார். அவர்களுளொருவராவது அக்காலத்திருந்த வேறுபுலவர்கள் யாராவது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளையுங் கடல்கொண்ட மதுரை கபாடபுரங்களையும்பற்றி ஒன்றும் சொல்லாதிருப்பது முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவிஷயங்களுளொன்று. அவர்களுக்குப்பிந்திக் களவியலுரையேற்பட்டகாலம்வரையிலுள்ள புலவர்களுள்ளும் ஒருவராவது மேற்கண்டவற்றில் ஒன்றையுங்கூறாமலிருப்பதுங் குறிப்பிடத்தக்கது.

மேலேகாட்டியபடி நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகள் பரந்துகிடந்திருப்பின் அவற்றின்கண் எத்தனையாறுகளும் மலைகளும் திவ்வியக்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் தடாகங்களும் பெரியோர்களும் இருந்திருத்தல்வேண்டும். பாண்டியர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆங்கு அரசுபுரிந்தனரெனில் அவர்களுடைய வெற்றிச்செய்திகளும் தருமச்செய்திகளும் பிறவும் எத்தனையோ ஆங்கு நிகழ்ந்திருத்தல் வேண்டுமே. வேலைவடிம்பலம்பநின்றபாண்டியனால்வெட்டப்பட்ட பஃறுளியாற்றைத்தவிரப் பிறவற்றைப்பற்றிய விசேடமொன்றும் வரிவடிவெழுத்துருவமைந்த நூல்களிலேனும், தொன்றுதொட்டு வாய்மொழியாய்வழங்குங்கதைகளிலேனும் ஏனோ காணவுங் கேட்கவுங் கிடைத்திலது? கடல்கொண்டனவென்றுரைக்கப்படுகின்ற நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளுக்கும் அளவில் மிகச்சிறியதேயான இந்தியாதேசத்திற் கங்கை சிந்துமுதலிய பல பேராறுகளும் எண்ணிறந்த சிற்றாறுகளுமுள்ளன. விந்தியபருவதம் சையபருவதம்முதலிய பெரியவுஞ் சிறியவுமான மலைகளும் பல வுள்ளன. எத்தனையோ தீர்த்தங்களும் ஸ்தலங்களும் புகழோங்கியநகரங்களு மிருக்கின்றன. அவற்றுள், பாம்பாறு வெள்ளாறு நொய்யல்ஆமிராவதிமுதலிய பலசிற்றாறுகளும், பன்றிமலை கொல்லிமலைமுதலிய சிறுகுன்றுகளும் புலவர்கள்பாடிய பாட்டுக்களிற் காணக்கிடக்கின்றனவே. அந்த நாற்பத்தொன்பதுநாடுகளில் இன்னவையிருந்தனவெனக்குறித்தற்கு ஒருகுறியையு மேனோ காண்கிலம்? பரந்துகிடந்த அந்நாடுகளில் ஆறு குளங்களொன்றுமில்லையென்றால் அவை வசித்தற்குரியவையாவது யாங்ஙனம்? ஆங்கிருந்த பஃறுளியென்னும் வெட்டாறுமாத்திரம் புலவர்பாடப்பெற்றிருக்க மற்றவையுமங்ஙனமாகாதிருப்பதேன்? நாற்பத்தொன்பதுநாடுகளும் ஆங்கிருந்ததுண்மையாயினன்றோ அவற்றையெல்லாம்பற்றித் தலையிடைச்சங்கப் புலவர்கள் பாடியிருப்பாரென்க.

கி. பி. 9-ம் நூற்றாண்டிலோ 10-ம் நூற்றாண்டிலோ களவியலுரையென்றுவழங்கப்பெறுகின்ற இறையனாரகப்பொருளுரையொன்று ஊர்பேர்தெரியாதவொருவரால் நக்கீரரெழுதியதெனப் புலப்படுத்தப் பட்டுள்ளது. அவ்வுரை நக்கீரராலெழுதப்பட்டதன்றென்பதற்கு அவ்வுரையிற்றானே சாக்ஷியங் காணப்படும். இக்காலத்தியபுலவர்கள்பலரும் அஃது அவராலியற்றப்பட்டதன்றென்றுகருதுவது நம்மிற்பலருக்குந் தெரியுமாதலின் அதனை யிங்கு விவரித்தலைவிடுத்தேன். ம-௱-௱-ஸ்ரீ து. அ. கோபிநாதராவ், M. A. அவர்களும், ஸ்ரீமாந் மு. இராகவையங்காரவர்களும் மேற்கண்டவுரை கி. பி. 8-ம் நூற்றாண்டிற்கு முந்தி இயற்றப்பட்டிருத்தல் கூடாதெனப் பலகாரணங்களுடன் செந்தமிழ்த்தொகுதியில் எழுதியிருக்கின்றனர். யானேற்றுக்கொள்வதும் அவர்களதுகொள்கையேயாம். இக்களவியலுரையிலே இதற்கு முற்காலத்திய தமிழ்நூல்களொன்றிலுங் காணப்படாத சில புதியவிஷயங்கள் வரையப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

"தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கமென மூன்றுசங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்கமிருந்தார், அகத்தியனாருந் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்பது. அவர்களாற்பாடப்பட்டன வெத்துணையோபரிபாடலும் முதுநாரையும் முதுகுருகுங் களரியாவிரையுமென இத்தொடக்கத்தன; அவர் நாலாயிரத்துநானூற்றுநாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்பது; அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதிமுதலாகக்கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப; அவர்க்கு நூல் அகத்தியமென்ப."

"இனி இடைச்சங்கமிருந்தார், அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழிமோசியும் வெள்ளூர்க்காப்பியனுஞ் சிறுபாண்டரங்கனுந் திரையன்மாறனுந் துவரைக்கோமானுங் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப; அவர்களாற்

பாடப்பட்டன கலியுங் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன என்ப; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை; அவர் மூவாயிரத்தெழுநூறியாண்டு சங்கமிருந்தாரென்ப; அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன்முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் ஐவர்பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது. அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது.”

“இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார், சிறுமேதாவியாருஞ் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர்கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் மருதனிளநாகனாரும் கணக்காயனார்மகனார் நக்கீரருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகைநானூறுங் குறுந்தொகைநானூறும் நற்றிணைநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பதுகலியும் எழுபதுபரிபாடலுங் கூத்தும் வரியும் பேரிசையுஞ் சிற்றிசையுமென்று இத்தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன்முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரையென்ப; அவருட் கவியரங்கேறினார் மூவர்பாண்டியரென்ப.” என்பனவாம்.

இதன்கண், கடல்கொள்ளப்பட்டமதுரை கபாடபுரம் தலைச்சங்கம் இடைச்சங்கம்முதலிய பலவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை தமக்கு இன்னவிடமிருந்து கிடைத்தனவென்று அவர் கூறவுமில்லை, அவற்றிற்கு ஆதாரம் நமக்குப்புலப்படவுமில்லை. எங்குங் காணக்கிடையாத புதுவிஷயங்களைக் கூறப்புகுந்த அவரே அவற்றிற்கு மேற்கோள்காட்டக் கடமைப்பட்டவர். அங்ஙனமவர் காட்டாதுவிட்டதுமன்றி நக்கீரரதுபெயரைக்காட்டிப் பலரையு மயங்கவைத்தனர்.

அவர் 'பாண்டியநாட்டைக்கடல்கொண்டது' என்றார். அந்நாடொன்றோ பலவோவென்னும் விவரமொன்று மவர் கூறவில்லை. அவரது நூலினிடத்து இடைச்சங்ககாலத்திற்குப்பிந்தி ஒருகடல்கோளே கூறப்பட்டது. தொல்காப்பியத்தை அவர் இடைச்சங்ககாலத்து நூல்களுள் ஒன்றாகக்கூறியிருக்கின்றார். இக் களவியலுரையையியற்றியவர் இளம்பூரணவடிகளென்றும் இக்காலத்துச் சிலர் கருதுகின்றனர். குமரியாற்றிற்குத்தெற்கில் (தமிழ்நாடல்லாத) பிறநாடிருந்து கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய இளம்பூரணவடிகளும், ஆங்குத் தலையிடைச்சங்கத்து மதுரையுங் கபாடபுரமுமிருந்த தமிழ்நாடு கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய களவியலுரையுடையாரும் ஒருவரெனக்கருதுவது எவ்வாற்றானு மமையாதென்க. இனிச் 'சங்கம்' என்னுஞ்சொல் தொல்காப்பியர்காலத்திலாவது அதற்குமுன்னாவது தமிழ்வழக்கிலிருந்ததில்லையென்று தெரிகிறது. "சகரக் கிளவியு மவற்றோ ரற்றே - அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே" என்னுந் தொல்காப்பிய வெழுத்ததிகாரத்துச்சூத்திர மதற்குச் சான்றாகும். அவர்காலத்திற்குப்பின்னரே அன்னசொற்கள்சில, "கடிசொ லில்லைக் காலத்துப் படினே" என்னுஞ் சொல்லதிகாரத்து எச்சவியற்சூத்திர விதிபற்றிப் புலவர்களா லங்கீகரிக்கப்பட்டு உபயோகத்தில் வந்திருக்கின்றன. தலைச்சங்கமும் இடைச்சங்கமும்இருந்ததாகச் சொல்லப்பெற்றகாலத்தில் அவற்றிற்குச் சங்கமென்னும்மொழி வழக்கிலில்லையாகவே அவை வேறு யாதுபெயர்கொண்டு வழங்கப்பெற்றன? களவியலுரைகாரர் அதனையல்லவோ காட்டியிருத்தல்வேண்டும்.

களவியலுரையெழுதியவருக்குப்பின்னர்த்தோன்றிய பேராசிரியர் தொல்காப்பியத்தின் பொருளதிகாரமரபியலிற்கண்ட "வினையி னீங்கி விளங்கிய வறிவின்—" என்னுஞ்சூத்திரத்து உரையில் இவ் விஷயத்தைப்பற்றி எழுதநேரிட்டபொழுது பனம்பாரனார்பாயிரத்திற்கு இளம்பூரணவடிகளெழுதிய உரையும் களவியலுரையும் அவர் முன்னிருந்தனவென்று தெரிகின்றது. களவியலுரை நக்கீரரது பெயராலெழுதப்பட்டிருந்தமையின் நக்கீரரதுபெருமைநோக்க அதனை அவர் தள்ளுவதற்கில்லை; இளம்பூரணவடிகளது உரையையும் அகற்றுவதற்கில்லை. களவியலுரையைச்சார்ந்து மூன்றுவகைச்சங்கமிருந்ததென்றும், இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் தொல்

காப்பியம் நூலாயிற்றென்றும் அவர் எழுதிவைத்தார். இளம்பூரணவடிகளது உரையைச்சார்ந்து "அது (தொல்காப்பியம்) தானும், பனம்பாரனார் 'வடவேங்கடந்தென்குமரி'யெனக் குமரியாற்றினை யெல்லையாகக்கூறிப் பாயிரஞ்செய்தமையிற் சகரர் வேள்விக்குதிரைநாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறும்பனைநாட்டோடுகெடுவதற்கு முன்னையதென்பதூஉம்" என்றெழுதியுள்ளார். அவர் 'பனைநாடு' என்றதனால் மணற்பாங்கான அப்பூமியிற் பனைமரங்கள் செறிந்திருந்தனவென்றும், ஆங்குக் கள்ளிறக்குவோரும் மற்றைக் கீழ்ப்பட்டசாதியாரும் ஆங்காங்குத் தங்கியிருந்தனரென்றும், அவர்கள் சிதைவுற்ற தமிழையோ வேறெப்பாஷையையோ பேசிவந்தனரென்றும், அது புலவர்கள் தமிழ்நாடென்றுகணக்கிடுமிலக்கணமுடையநாடன்றென்றும் நாம் நினைத்தற்கு இடந்தருகின்றது. பேராசிரியர் எழுதியதினின்றும் கடல்கோள் ஒருமுறையேநிகழ்ந்ததென விளங்குகின்றது.

இனிச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், "பஃறுளியாறு- குமரிப்பக்கத்ததோர்யாறு" என்று குறித்துள்ளார். இதனாற் குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்குமிடையே சொற்பதூரந்தானிருந்ததெனக் கிடைக்கவே அவற்றிற்கு இடைப்பட்டநாடு விசாலமானதென்றுசொல்வதற்குச் சற்றுமிடமில்லை. பேராசிரியர் பனைநாடென்றது இதனையேயாம்போலும்.

அரும்பதவுரையாசிரியருக்குப்பின்னர்ச் சிலப்பதிகாரத்திற்குரையெழுதிய அடியார்க்குநல்லார் இதனைப்பற்றி யெழுதியுள்ளார். இவர் கி. பி. 12-ம்நூற்றாண்டிற்குமுந்தியவரல்லரென்பது கலிங்கத்துப்பரணியிற்கண்டபாடல்களை அவர் மேற்கோளாகக்காட்டுவதனால் விளங்குகின்றது. சிலப்பதிகாரவேனிற்காதையுரையிற் பின்கண்டவாறு அவர் எழுதியுள்ளார்:—

"நெடியோன்குன்றமும் தொடியோள்நதியுமென்னாது பௌவமுமென்றது என்னையெனின், முதலூழிபிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனும் என் றிவருள்ளிட்ட நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமுள்ளிட்டவற்றைப்

புணர்ந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயி னார் காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின் மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர்பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப் படுத்து இரீயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலிமுகத் திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலிவா னென்மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும் பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும் குமரி கொல்லமுத லிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலாற் குமரியாகியபௌவ மென்றாரென்றுணர்க" என்பது.

)

கடல்கொண்ட தென்மதுரையினின்று கபாடபுரத்திற்குப் பாண் டியர்களும் சங்கமும்வந்ததற்குக் களவியலுரையிற் காரணங்கூறாதிருப் பதனை அவர்கண்டு அதற்குத் தாம் ஒருகடல்கோள் கற்பித்து முதற் சங்ககாலத்தை முதலூழியிறுதியென்றார். அந்தப் பெருமகன்காலத் திற்றான் அதுவரைக்கும் 'பிறநாடு' 'பனைநாடு' 'பாண்டியநாடு' எனப் பட்டுவந்தது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளாய்ப் பெருகியது; குமரி யாற்றிற்குப் பக்கத்ததாயிருந்த பஃறுளியாறு தெற்கில் எழுநூற்றுக் காவதவாறு அகற்றப்பட்டது; ஒன்றாயிருந்த கடல்கோள் இரண்டூழிக ளாய் மாறிவிட்டது; இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் முதற்சங்கத் திற் புலப்படுத்தப்பட்டதொன்றாயிற்று; சயமாகீர்த்தியனான நிலந்தரு திருவிற்பாண்டியன், தலைச்சங்கத்துக்கவியரங்கேறியபாண்டியரெழுவரு ளொருவனாக்கப்பட்டான் ; பஃறுளியாற்றிற்குத் தெற்கில், தென் பாலிமுகமென்னும் பிறநாடொன் றுண்டாக்கப்பட்டது; அவராற் சிருஷ்டிக்கப்பட்டநாற்பத்தொன்பது விசாலமான தமிழ்நாடுகளுக்கும் நாமகரணமுஞ்செய்யப்பட்டது. ஆச்சரிய மாச்சரியம்! அவரே சிலப் பதிகாரவுரைப்பாயிரத்தில் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம்புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்து அகத்தியனாரும் தொல்காப் பியனாரும்......" என்றெழுதியுள்ளார். முற்கூறியதும் இஃதும் நேர்

விரோதமாயிருப்பதாக என்போலியருக்குத் தோன்றுகிறது. வேனிற்காதையுரையில் மேலேகண்டதனைக்கொண்டு தொல்காப்பியம் புலப்படுத்தப்பட்டது முதலூழிக்கடல்கோளுக்கு முன்னரோ பின்னரோவென்றுதெளிவதற் கிடமில்லை. தாம் இவற்றைக்கூறியதற்காதாரத்தினை, "இஃது என்னைபெறுமாறெனின் 'வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' என்பதனானும், கணக்காயனார்மகனார் நக்கீரனாருரைத்த இறையனார்பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள்முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்" என் றிவ்வாறு எழுதியிருக்கின்றார். பெயர்குறித்து மேற்கோளாகக் காட்டியுள்ள மூன்றனுள்ளும் இதனைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதையெல்லாம் யான் மேலே காட்டியிருக்கின்றேன். அவற்றில் இவர் இளம்பூரணவடிகள்முதலியோருரைத்ததற்கு நேர்விரோதமாய்க் கூட்டியதொன்றுங் காணப்படவில்லை. பிறவாற்றானுமென்பது எஞ்சிநிற்கின்றது. அது இன்னதென்பதனை ஈசனேயறியவேண்டும். இவர் கூட்டியதற்கு மேற்கோளொன்றுங்காட்டாது பிறவாற்றானுமென்பதிற் றள்ளிவிடுதல் இவருக்குச் சிறிதும் நியாயமன்று. இவர்பெருக்கியதற்கன்றோ பல மேற்கோள்களையுங் காட்டியிருத்தல்வேண்டும்.

அடியார்க்குநல்லார்க்குப்பின்னர்வந்த நச்சினார்க்கினியரோ அவருக்குச் சற்றும் பின்வாங்கவில்லை. அவரெழுதியவற்றைத் தமதாக்கியதோடமையாது தாமும் தமதுவிதத்துக்கு வேண்டியவளவு கூட்டியுள்ளார். அவற்றுட் சிலவற்றை இங்குக் குறிக்கின்றேன்:— தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையின்கண் (1) "இவரிந்நூல் (தொல்காப்பியம்) செய்தபின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட்பல்பிணிச் சிற்றறிவினோருணர்தற்கு நான்குகூறாக (வேதத்தை)ச் செய்தார்" என்றார். அதாவது இருக்கு யஜுஸ் ஸாமம் அதர்வம் என்னும் நான்கு பகுதிகளாகச் செய்தனரென்பது. (2) "பாண்டியன்மாகீர்த்தி யிருபத்துநாலாயிரம்யாண்டு வீற்றிருந்தான்" என்றார். தலைச்சங்கமிரீஇய காய்சினவழுதிமுதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மருள், கவியரங்கேறினார் எழுவரெனின், அவ்வெழுவருள் மாகீர்த்தியுமொருவனெனின், அவனும் அவ்வெண்பத்தொன்பதின்மருள், கடைசியவனல்லனென்பதாயிற்று. அவர்களெல்லோரும் நாலாயிரத்துநானூற்றுநாற்

பதிற்றியாண்டு சங்கமிரீஇயினுரெனின் ஒவ்வொருவனுக்கும் சராசரி ஐம்பது வருஷந்தானேயாகின்றது; அப்படியிருக்க இடையிலிருந்த மாகீர்த்தியென்பானுக்கு இருபத்துநாலாயிரமாண்டு ஆயுளை நச்சினார்க்கினியர் ஏனேகொடுத்துள்ளார்? அத்தனைகாலமும் அவனிருந்திருப்பின் அக்காலத்திற்குள் தலைச்சங்கம் ஐந்துதடவை நிகழ்ந்திருக்கலாமே! (3) அகத்தியமுனிவருக்கும் தொல்காப்பியனுருக்கும் ஒரு பெருங்கலகம் நேரிட்டதாக அவர் எழுதியிருக்கின்றார். (4) பொருளதிகாரப்புறத்திணையியலில் "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னுஞ் சூத்திரத்தினுரை விரிப்பவர் "இனித் தமிழ்ச்செய்யுட்கண்ணும் இறையனுரும் அகத்தியனுரும் மார்க்கண்டேயனுரும் வான்மீகனுரும் கௌதமனுரும்போல்வார்செய்தன தலையும், இடைச்சங்கத்தார்செய்தன இடையும், கடைச்சங்கத்தார்செய்தன கடையுமாகக்கொள்க" என்றார். இவைபோல்வன பலவுள்ளன. இவரும் இவற்றிற்கு மேற்கோளொன்றுங் காட்டாதொழிந்தார். எங்கிருந்து இவர் இத்தனைவிஷயங்களையுந் தெரிந்துகொண்டாரென்பதை இவரே யறிவார்போலும். அடியார்க்கு நல்லாராகிலும் 'பிறவாற்றனும்' என்றதோர்மொழியைக் கூறினர்; இவரோ அதனையுங்கூறுது விடுத்தார்! நாளுக்குநாள் ஒருவருக்குப்பின் ஞெருவரால், தலையிடைச்சங்கக்கதை இவ்வாறு கூட்டுமாற்றுக்களை யடைந்து இப்பொழுதுள்ளநிலைமைக்குவந்துவிட்டதெனத் தெளிவுற விளங்குகின்றது.

கடல்கோள்நேரிட்டதற்குக்காரணமாய் இளங்கோவடிகள்கூறுவதியாதெனில்:—

"வடிவே லெறிந்த வான்பகை பொறுது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" (11, 18—19) என்பது.

திருவிளையாடற்புராணத்தின்கண்ணும் இக்கதையைக் காணலாம். மீனாக்ஷிசுந்தரேசுவரர் உக்கிரபாண்டியனுக்கு வேல் வளைசெண்டென்னுமிம்மூன்றினையுங் கொடுத்தகாலத்துச்சொல்லியது பின்வரும்பாட்டால் விளங்கும்:—

"மைந்த கேட்டி யிந்திரனுங் கடலு முனக்கு வான்பகையாஞ்
சந்த மேருத் தருக்கடையுஞ் சதவேள் விக்கோன் முடிசிதற
விந்த வளைகொண் டெறிகடலி லிவ்வேல் விடுதி யிச்செண்டா
லந்த மேரு தனைப்புடையென் றெடுத்துக்கொடுத்தா னவைமூன்றும்."(12, 61.)

பின்னர் மதுரையைக் கடலழிக்கவந்தவுடனே உக்கிரபாண்டியன் வேலெறிந்ததனால் அது சுவறியதனைப் பின்வரும் பாடல்களா லறியலாகும்:—

“வங்கவேலை வெள்ளமாட மதுரைமீது வருசெயல்
கங்குல்வாய திங்கண்மீது காரிவாய காருடல்
வெங்கண்வா ளராவிழுங்க வீழ்வதொக்கு மலதுகா
ரங்கண்மூட வருவதொக்கு மல்லதேது சொல்வதே.” (13, 8.)

“எடுத்தவேல் வலந்திரித் தெறிந்தவேலை வேன்முனை
மடுத்தவேலை சுஃறென வறந்துமான வலிகெட
வடுத்துவேரி வாகையின்றி யடிவணங்கு தெவ்வரைக்
கடுத்தவேல் வலான்கணைக் காலின்மட்ட தானதே.” (13, 14.)

உக்கிரபாண்டியன் இந்திரன்முடிமேல்வளையெறிந்ததும், மேருவைச் செண்டாலடித்ததும், மேகங்களைத் தளையிட்டதும் முதலிய கதைகள், திருவிளையாடற்புராணத்தின்கண் அவ்வப்படலங்களில் விரிவாய் வரையப்பட்டிருக்கின்றன. இளங்கோவடிகள்கூறியது மிக்கதையினையே யென்பது மேற்கண்டஅடிகளாலும் அவற்றையடுத்து அவராலெழுதப்பட்ட பின்வரும் அடிகளாலும் விளங்கும்:—

“முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கென.” (11, 26—29.)

இக்கதையொன்றையன்றி வேறொன்றும் இதுபற்றியுள்ளது எங்குங் காணப்படவில்லை. இதுவோ கூடன்மதுரையில் நிகழ்ந்தது. இது கடல்கொண்டமதுரையின்கண் நடந்ததெனக் கூறமுடியாது. இதுநிகழ்தற்குமுன்னரேதொட்டுப் பாண்டியர்கள் இங்கேயிருந்துவந்தனரெனத் தெரிகிறது. அங்ஙனங்கூறுவதாயின்வேல்வளைசெண்டுகொடுத்தமீநாக்ஷி சுந்தரேசுவராதியரையும் ஆங்குக் கொண்டுபோதல்வேண்டும். தென்மதுரையழிதற்குக் காரணமுண்டாகுமுன்தொட்டுப் பாண்டியர்கள் கூடன்மதுரையின்கண் இருந்துவந்தனரெனின், தென்மதுரையினின்று கபாடபுரத்திற்கும் அங்கிருந்து கூடன்மதுரைக்கும் அவர்கள்வந்தனரெனக்கூறுங்கூற்று ஒருசிறிதும்பொருந்தாதாம். இவ்விரண்டிலொன்று பொய்யாதல்வேண்டும். களவியலுரைகாரர்வகுப்பாரதுகற்பனையே

பொய்யென்றுகொள்ளப்படுமென்பதில் இனி ஐயமுண்டாகாது. இளங்கோவடிகளதுகாலத்துக் கடல்கொண்டமதுரைக்கதை வழக்கிலிருந்து அவரு மதனையேற்றுக்கொண்டிருப்பின் இங்ஙனம் அவர் கூறுதற்கே யிடமில்லையென்பது தெளிவாகும். அவர் கூடன்மதுரையைப் பாண்டியர்களது பழைய ராஜதானியென்றுநினைத்திராவிட்டால் மேலே குறித்தபடி அதனைப் 'பழவிறன்மூதூர்' என்று ஒருகாலுங் கூறியிருக்க மாட்டார். அங்ஙனமாயின் மீநாக்ஷிசுந்தரேசுவரர்கலியாணம்முதலிய பலகதைகளும் கூடன்மதுரையில் நடந்தது இடைச்சங்ககாலத்திற்குப் பின்னரேயென்று சொல்லவேண்டியும் வரும்.

மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனார் பின்கண்டவாறுகூறியுள்ளார்:—

"தென்னவர்ப் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந,"

அதற்குச் "(சுந்தர)பாண்டியனென்னும் பெயரையுடைய, கிட்டுதற்கரிய வலியினையுடைய,யாவருக்கும் முன்னவரான சிவபெருமானது வமிசத்தில்வந்த, பக்கமலையிலேவிழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையையுரிமையாகக்கொண்ட ஒப்பற்றவனே,'' என்னும்பொருள் வெளிப்படையாம். இதனாலே பிந்தியபாண்டியர்கள் சிவபெருமானுடைய வமிசத்தினரென்று சொல்லப்படுவது மமையும். பாண்டியவமிசத் தலைவராயுள்ள இவரே கூடன்மதுரையிலிருந்தனரென்றால் அவருக்குப் பிந்தியவர்கள் கடல்கொண்டமதுரை கபாடபுரங்களினின்று இங்கு வந்தனரென்பது எப்படிப்பொருந்தும்?

இதுநிற்க, முதலூழியிறுதிக்கண் நிகழ்ந்ததென அடியார்க்குநல்லார்கூறுங்கூற்றினைச் சற்று ஆராய்வாம்:—காவதமென்பதனை உலக வழக்கப்படி 10 மைல்தூரமெனக்கொள்ளின் 700 காவதமும் 7000 மைலாகின்றது. இஃதே குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்குமிடையிற்கண்டதூரம், அல்லது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளின் தென் வடற்பரப்பாகின்றது. குமரிக்கும் தென்றுருவத்திற்குமுள்ளதூரமோ 6900 மைலுக்குங் குறைந்துள்ளது. நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள் மட்டுமே தென்றுருவத்திற்கப்பால் நூறுமைல்தூரத்திற்குமேல் வியாபித்திருத்தல்வேண்டும்; அதற்கப்பால் தென்பாலிமுகமென்னும்நாடும்

அதற்குமப்பாற் கடலுமிருந்திருத்தல்வேண்டுமென்பதாயிற்று. இனிக் குமரிக்கும் ஆசியாகண்டத்தின்வடவெல்லையான உத்தரமகாசமுத்திரத்திற்குமுள்ள தூரம் 5000 மைலுக்குங் குறைந்தது. நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள்மாத்திரமே அதனினும் 2000 மைலுக்குமேற்பட்ட தென்வடலளவுபெற்றிருந்தனவென்று சொல்லப்படுகிறது. இதனுடன் தென்பாலிமுகத்தினளவையும் சேர்ப்போமாயின் இன்னும்பெருகுமன்றே! இப்பரதகண்டத்திலுள்ள சகலபாஷைகளும்வழங்கப்பெற்ற நிலங்களைச்சேர்த்துத் தென்வடலளவுநோக்கின், அது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளினளவிற்கு நான்கிலொருபகுதிதா னிருத்தல்கூடும். இந்தியதேசத்தையாண்ட சக்கரவர்த்திகளுள் ஒருவரேனும் நாற்பத்தொன்பதுநாடுகளினளவிற் பாதி அல்லது மூன்றிலொருபங்குநிலமுடையவராய் மக்காலத்து மிருந்திலர். பாண்டியனுக்குக் கடல்கொள்ளப்படாத நிலம் தென்வடல் 250 மைலுக்குமே யில்லை.

பூசாஸ்திரம்வல்லோர் மிகப்பழையகாலத்திற் குமரிக்குத்தெற்கே லெமூரியாகண்டமென்னும்பூமியிருந்து கடல்கொண்டதாகச் சொல்கின்றனர். மேற்கண்ட நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளும் அதைச் சேர்ந்தனவாயிருந்திருக்கவேண்டுமென்பது நம்மவர் பலரது அபிப்பிராயமாம்- லெமூரியாகண்டம் முழுதுமிருந்தகாலத்தும் தென்வடலிற் குமரியிலிருந்து 7000 மைல்தூரமிருந்ததென்றுசொல்லுவார் ஒருவரையுங்காணேம். நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளுக்குக் கொடுத்திருக்குமளவுள்ள நிலம் குமரிக்குத்தெற்கில் எப்பொழுதாவது இருந்ததாகச் சொல்லுவதற் கிடமேயில்லை. லெமூரியாகண்டத்தைக் கடல்கொண்டதாகப் பூசாஸ்திரம்வல்லோர்சொல்வது பல லக்ஷம்வருஷங்களுக்குமுன்னரேயாகும். 'Geology of India' என்னும் நூலில் H. B. Medlicott என்பவரும் W. T. Blandford என்பவரும் பின்வருமாறுகூறுகின்றனர்.

"Naturalists have before now appealed to a former land area stretching across what is now the Indian Ocean, to explain certain relationships between the living fauna of the Indian Peninsula on the one hand, and South Africa and Madagascar on the other, and the name "Lemuria" given to this suppositious continent, is familiar to many." (P. 209.)

"We see then that throughout the later part of the palœozoic and the whole of the Mesozoic era, there was continuous stretch of dry land over what is now the Indian Ocean, which finally broke up and sank beneath the sea in the tertiary period." (P. 211.)

"It is probable that at the close of the cretaceous or the commencement of the eocene period the great Indo-African continent was finally broken up, and all but *the remnants in India* and South Africa sunk finally beneath the sea." (P. 494.)

இதுதவிர 'Lost Lemuria' என்னும்புத்தகத்திற் பின்கண்டவைகள் காணப்படுகின்றன:—

"Note. Dismemberment of Lemuria is said to have taken place before the beginning of eocene age." (P. 8.)

"India, South Africa, and Australia were connected by an Indo-Oceanic continent in the Permian epoch and the former two countries remained connected to the end of the Miocene period." (P. 10.)

லெமூரியாகண்டம் கடல்கொள்ளப்பட்டு வெகுகாலமானபின்னர் ஐரோப்பா அமெரிக்காகண்டங்களுக்கிடையில் இப்பொழுது அட்லான்டிக் சமுத்திரமிருக்குமிடத்தில் அட்லான்டிஸ் (Atlantis) என்றொரு கண்டமுண்டாகி அழிந்துவிட்டது. அதைப்பற்றியும் லெமூரியாவைப் பற்றியும் பின்கண்டவாறு Lost Lemuria என்னும் புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது:—

"A period between 4 and 5 million years probably represents the life of the continent of Atlantis. But in the case of Lemuria no dates can be stated even with approximate accuracy." (P. 13.)

அட்லான்டிஸ் என்னுங்கண்டத்தைக் கடல்கொண்டபின்னர் அதில் எஞ்சியிருந்த Poseidonis என்னுந்தீவைக் கி. மு. 9564-ம் வருஷத்திற் கடல்கொண்டதாகச் சாஸ்திரக்ஞர்களாற் சொல்லப்படுகிறது. மேற்கண்டவைகளால் லெமூரியாவைக் கடல்கொண்டது

லக்ஷக்கணக்கானவருஷங்களுக்குமுன்னரென்றும், ஏதாவது இந்தியாவையொட்டிச் சொற்பநிலம் முதற்கடல்கோளிற் சேராமலிருந்திருக்கலாமென்றும் ஏற்படும். லெமூரியாகண்டம் மூழ்கியபின்னர் அவ்விடத்தில் வேறுநிலமிருந்ததில்லையென்று தெரிகிறது. இடைச்சங்கம் 3700 வருஷமும் கடைச்சங்கம் 1850 வருஷமும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இரண்டுஞ்சேர்ந்து 5550 வருஷந்தானாகிறது. இடைச்சங்கமிரீஇய முடத்திருமாறனென்னும் பாண்டியனே கடைச்சங்கமிரீஇய முதற்பாண்டியனெனச் சொல்லப்படுவதால் அவ்விரண்டுசங்கங்களுக்குமிடையில் அதிககாலம் நிகழ்ந்ததற்கிடமில்லை. தலைச்சங்கத்திற்கு மிடைச்சங்கத்திற்கு மிடைநிகழ்ந்தகாலத்தளவு தெரியவில்லை. சுமார் நாலாயிரம் அல்லது ஐயாயிரம் வருஷமென்று வைத்துக்கொண்டாலும் நாற்பத்தொன்பது தமிழ்நாட்டுக்கடல்கோள் பதினாயிரம்வருஷத்திற்குமுன்னர் நிகழ்ந்ததாகும். அப்பொழுதோ லெமூரியாகண்டமிருந்ததென்று சொல்வதற்கிடமில்லை. 700 காவதவாறு தென்வடலளவுள்ள தமிழ்நாடுகளக்காலத்திலிருந்ததென்றுசொல்லுவது பொய்யென்றேற்படும். அந்தக்கண்டத்தில் எஞ்சியிருந்த சொற்பநாடு சில வருஷங்களுக்குமுன்னர்க் கடல்கொள்ளப்பட்டிருக்கலாம். அது கலித்தொகையிலும்சிலப்பதிகாரத்திலுங்கூறிய கடல்கோளாயிருத்தல்வேண்டும். இந்தியாவின்கடற்கரையோரப்புறங்களிற் சிறிதுதூரம் ஆங்காங்குக் கடல்கொள்ளப்பட்டதாகச் சரித்திரவாயிலாய் நாமறிகின்றோம். அவையெல்லாம் அடியார்க்குநல்லார்கூறிய நாற்பத்தொன்பதுநாட்டுக் கடல்கோளாக ஒருபோதுமாகாதென்க.

மேலும் முதலூழியிறுதிக்கடல்கோளைப்பற்றித் 'தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறுங்கடல்கொண்டொழிதலால்' என்று அடியார்க்குநல்லார்கூறியுள்ளார். இதனாற் குமரியாற்றின் வடகரைவரையிற் கடல்கோள் கூறப்பட்டதாயிற்று. அக்கடல்கோளுக்குப்பிந்தியுள்ள கபாடபுரமெங்கிருந்தது? குமரியாற்றிற்குத்தெற்கிலா? வடக்கிலா? தெற்கிலிருந்ததென்பதற்கோ அங்கு நாடேயில்லை. வடக்கிலிருந்ததென்பது அவரதுகொள்கைக்கு விரோதிப்பதோடு குமரியாற்றிற்கு வடக்கிலுள்ளநாட்டுக்கு ஒருபோதுங் கடல்கோளில்லை; ஆகவே கபாடபுரத்தைக் கடல்கொண்டதென்பது பொய்யாய்முடியும். களவியலுரைகாரர்கூறியபடி மதுரை கபாடபுரமிரண்டிற்கு மொருகடல்கோள்கூறினால் இச்சங்கடம் நேரிடாது.

மகாபாரதயுத்தகாலமும் தலைச்சங்ககாலமும் ஒன்றென்று பல பண்டிதர்களாற் சொல்லப்பட்டிருக்கிறது. தலைச்சங்கப்புலவராகிய முரஞ்சியூர் முடிநாகராயர் பாரதயுத்தத்திற் படைக்குணவளித்த பெருஞ்சோற்றுதியனைமுன்னிலைப்படுத்துப்பாடியிருப்பது முதலிய காரணங்கள் அதற்குக் கூறப்படுகின்றன. அதனைப் பிசகென்று சொல்லுவதற்கிடமில்லை. பாரதயுத்தகாலத்திற்குமுன்னரே அர்ஜுனன் தென்றிசைநோக்கிச்சென்று மணலூரபுரத்திற் சித்திராங்கதையென்னும் பாண்டியராஜகுமாரத்தியைமணந்து பதின்மூன்றுமாதம் ஆங் கவளுடன்வசித்துப் பப்புருவாகனனென்னும் புத்திரனைப்பெற்ற சரித்திரத்தை நமதுநாட்டு மகாபாரதம் ஆதிபருவத்திலடங்கிய அர்ஜுனன்வனவாசபருவத்திற்காணலாம். சபாபருவத்திலடங்கிய திக்குவிஜயபருவத்திற் சகதேவன் தென்றிசைநோக்கிச்சென்று பல அரசர்களையுந் தன்வசப்படுத்துக்கொண்டு பாண்டியனுடடைந்ததும் அவ்விடத்துப் பாண்டியனுஞ் சித்திராங்கதையும் அவனையாதரித்து இரத்தினமுதலிய கொடுத்தனவற்றைப்பெற்று அவற்றுட் பலவற்றையும் தன் தமையன் புத்திரனாகிய பப்புருவாகனனுக்குக்கொடுத்துவிட்டுத் தெற்கே பொதியமலைநோக்கிச்சென்று அதனைவலஞ்செய்து தாமிரபருணியைக்கடந்து சமுத்திரதீரத்தையடைந்து இலங்கைக்குக் கடோற்கசனையனுப்பியது முதலியகதைகள் காணப்படும். அக்காலத்திற் பாண்டியர்கள் தாமிரபருணிக்குவெகுதூரம் வடக்கில்வசித்ததாகத் தெளிவாய்த்தெரிகிறது. ஆகவே அக்காலத்திற் பாண்டியர்கள் குமரியாற்றிற்குத் தெற்கில் வசித்தனரென்னுங்கதை பொய்யாகத்தானேயிருத்தல்வேண்டும்.

நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளைக் கடல்கொண்டது காலக்கிரமத்திலா, திடும்பிரவேசத்தாலா? முன்னையதானால் அக்காலத்துத் தமிழ் நூல்கள்முதலியன அதனாலழிந்துபோயினவென்று கொள்ளுதல் கூடாது. திடும்பிரவேசத்தாலென்றாற் பாண்டியவமிசமும் சங்கப் புலவர்களும் இரண்டுகடல்கோள்களுக்கும் தப்பியிருந்தனரென்று கொள்ளுதல் இயைபுடைத்தன்று. கூடன்மதுரை கபாடபுரமழிந்த பின்னருண்டானதென்றாற் குமரிக்குத் தெற்கிலிருந்த மதுரைக்குத் ‘தென்மதுரை’ யென்னும்பெயர் எப்பொழுது எவரால் அதற்காகக் கொடுக்கப்பட்டது ? களவியலுரைக்குமுந்திய நூல்களில் அதனைத் ‘தென்மதுரை’யென்றாவது கூடன்மதுரையை ‘வடமதுரை’யென்றாவது கூறப்பட்டிருக்கிறதா?

கடைச்சங்கம் 1850யாண்டு இருந்ததென்றுசொல்லப்படுகிறது. கடைச்சங்கத்து இறுதிக்காலம் கி. பி. 2-ம்நூற்றாண்டென்றுகொண்டால் அச்சங்கம் கி. மு. 17-ம் நூற்றாண்டில் துடங்கியிருத்தல்வேண்டும். மகாபாரதயுத்தம் நடந்தகாலம் வாயு, மத்ஸ்ய, விஷ்ணு, பாகவத, புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறபடி கணக்கிட்டால், கி. மு. 15-ம் நூற்றாண்டாகும். விளங்லத கோபாலையரவர்கள் 'The chronology of Ancient India' என்னும் ஓர் புத்தகம் வெளியிட்டிருக்கின்றார். அது பல பண்டிதர்களாலும் நன்குமதிக்கப்படுகின்றது. ஐயரவர்கள் பலகாரணங்களை விரிவாய்க்காட்டிப் பாரதயுத்தகாலம் கி. மு. 12-ம் நூற்றாண்டென்று நாட்டியிருக்கின்றார். எவ்வகையாய்ப் பார்த்தாலும் கடைச்சங்கந்துடங்கிப்பலநூற்றாண்டுகளுக்குப்பின்னர்ப்பாரதயுத்தம் நிகழ்ந்ததெனலமையும். முரஞ்சியூர் முடிநாகராயர் பாரதயுத்தகாலத்திலிருந்தவரென்றால் அவர் தலைச்சங்கப்புலவரா? கடைச்சங்கப்புலவரா?

நாற்பத்தொன்பதுதமிழ்நாட்டுக்கதையை ஏற்றுக்கொண்டால் இவற்றைப்போலின்னுமநேக அசம்பாவிதங்களுக்குப் பதில்கூற வேண்டிவரும். மேற்காட்டியவை புத்திமான்களுக்குப்போதுமென்று நினைத்து இம்மட்டில் விதை நிறுத்துகிறேன்.

கபாடபுரமிருந்ததென்பதற்காதாரம் வான்மீகிபகவானியற்றியுள்ள ராமாயணத்திற் காணப்படுகிறதென்று சிலர் எழுதியுள்ளார். அவர்கள் காட்டுவது கிஷ்கிந்தாகாண்டத்து 41-வது சருக்கத்திற் சுக்கிரீவன் சீதாபிராட்டியைத்தேடும்படி வானரர்களையனுப்பும்போது இன்ன இன்னவிடத்தில் தேடுங்களென்று விவரமாய்க்கூறுமிடத்துக்கண்ட பின்வரும் சுலோகமாம்:—

"ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணிவிபூஷிதம்।
யுக்தம் கவாடம் பாண்ட்யானாம் கதா த்ரக்ஷ்யத வானரா:॥"

தாமிரபருணிநதியைக்கடந்துசெல்லுங்கள், "பின்னர், வானரர்காள்! சென்று பொன்மயமானதும் முத்துமணிகளாலலங்கரிக்கப்பெற்றதும் சேர்க்கப்பட்டிருப்பதுமான பாண்டியரது கவாடத்தை(கதவை)க்காண்பீர்கள்."—கதவென்று பொருள்படும் பதம் ராமாயணத்தில் 'கவாடம்' என்றிருக்கிறது. ராமாயணத்திற்குள்ள பலவியாக்கியானங்களுள் தீர்த்தீயத்தில்—"கவாடம்—பாண்டியனது நகரத்துவாரக் கதவு" என்று

எழுதப்பட்டிருக்கிறது; திலகத்தில்—மூலத்தில் 'யுக்தம்' என்றிருக்கும் பதத்திற்கு "நகரத்தின் கோட்டைச்சுவரிற் சேர்க்கப்பட்டிருக்கிற" என்பது பொருளென்று கண்டிருக்கிறது; கோவிந்தராஜீயத்தில் "கவாடம், இதனாலே நகரங் குறிக்கப்படுகிறது" என்று கண்டிருக்கிறது. இதனைத்தவறுபடப் பொருள்செய்து ராமாயணத்திற் கபாடபுரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதென்று கூறுகின்றனர். கதவொன்று காணப்படுமென்றால் எதனுடைய கதவென்னும் வினாவெழும்; நகரத்தின்கதவென்பது அதற்கு விடையென்பதைக்காட்டக் கோவிந்தராஜர் மேற்கண்டவாறு எழுதினார். கவாடமென்னும் பதம் ஒரு நகரத்தின்பெயராயிருப்பின் அவ்வாறு தெளிவாயன்றோ எழுதியிருப்பார். கவாடமென்னும் பதம் குறிக்கிறதென்றால் ஒருபொருள்வாயிலாய் மற்றொருபொருளைக்காட்டுகிறதென்றல்லவோ கொள்ளப்படும். கோட்டைக்கதவுகோட்டைக்குள் அடங்கிய நகரமொன்றுள்ளதென்று குறிப்பிக்காதோ? கவாடத்தைக் கபாடமெனத்திரித்துப் புரமென்னுஞ்சொல்லொன்றைச்சேர்த்துக் கபாடபுரமென்றுபண்ணுதற்கு ராமாயணத்திலிடமிருக்கிறதென்றால் அது வியப்பாயிருக்கிறது.

மேற்கண்டவற்றையெல்லாம் நன்குகவனித்தாற் குமரிக்குத்தெற்கிற் சொற்பநாடு ஒருகாலத்திலிருந்ததென்றும், அதனை ஒருகாலத்திற் கடல்கொண்டதென்றும், அப்படி யதனைக் கடல்கொள்வதற்குமுன்னராவது பின்னராவது பழையதமிழ்ப்புலவர்கள் அதனைத் தமிழ்நாடென்றுகொண்டதில்லையென்றும், கி. பி. 9-ம் அல்லது 10-ம் நூற்றாண்டிற் களவியலுரையெழுதிய ஊர்பேர்தெரியாதவொருவர் கடல்கொண்டநாட்டைத் தமிழ்நாடெனநினைத்துத் தலையிடைச்சங்கங்களை அதில் தாபித்தாரென்றும், பிறகு அந்தக்கதை பல கூட்டையுந் திரிபையுமடைந்து இப்பொழுதிருக்கும்நிலைமைக்குவந்திருக்கிறதென்றும் நினைக்கவேண்டியிருக்கிறது. நக்கீரனார்பெயரைக் களவியலுரைக்கேற்றியதனாற் பலரும் மயங்க இடமாயிற்று.

ஆனால், தலையிடைச்சங்கங்களிருந்தனவல்லவோவென்றால் அவை அந்தப்பெயர்களுடன் கடல்கொண்டதாகச்சொல்லப்படுகிற மதுரை கபாடபுரங்களிலிருந்தனவென்று நினைக்க இடமில்லை. குமரிக்குவடக்கிற் பாண்டியர்களிருந்தவிடத்துப் பலநூற்றாண்டுகள் சங்கமிருந்துவந்ததெனத் தெரிகிறது. அதைக் கடைசியாயிருந்த சங்கப்புலவர்களும்

ஒரே சங்கமாகக்கொண்டனரென்றும், தலையிடைகடையென்று பிரிக்கவில்லையென்றும் நினைப்பதற்கு ஆதாரமிருக்கிறது. தலைச்சங்கப்புலவர்களென்றும் இடைச்சங்கப்புலவர்களென்றும் இப்போது கூறப்படுகிறவர்களாலியற்றப்பட்டசெய்யுள்களும் அந்தப்பேதமின்றியே (கடைச்சங்ககாலத்தில் தொகுக்கப்பட்ட) அகநானூறு புறநானூறு முதலிய நூல்களிற் கிடைக்கின்றன. நெடுநாள் சங்கமிருந்ததென்றால் தலைக்காலத்திருந்த புலவர்களும் இடைக்காலத்திருந்தபுலவர்களும் கடைக்காலத்திருந்த புலவர்களுமென்று விவகரிப்பது அவசியமாயிருக்கலாம். அதற்காகச் சங்கத்தைத் தலை இடை கடையென்று மூன்றாகப்பிரித்தல் வேண்டியதேயில்லை.

(இன்னும்வரும்.)

பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரி,

தஞ்சை.

---

ஸ்ரீ:

## பழமொழிமுதற்பாட்டும் சிலபிழைதிருத்தமும்.

இப்பொழுது மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்றும் பழமொழி மூலமுமுரையும் செந்தமிழ்ப்பிரசுரமாய் வெளியிடப்பெற்றுவருவதில் அதன் முதற்பாட்டுப் பிரதிகளிற் காணப்படாமையாற் கிடைத்தபொழுது எழுதிக்கொள்ளும்படி அதற்கு இடம்விட்டுப் பதிக்கப்பட்டிருப்பது செந்தமிழ்நேயர்பலர்க்குந் தெரிந்தவிஷயம். அப்பாட்டு,மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் 'பழையநன்னூலுரையுண் மேற்கோளாகக்காட்டப்பட்டிருப்பதாய்ச்சொல்லத் தாம் தெரிந்ததாக ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. ராகவையங்காரவர்கள்சொல்ல நானறிந்து மிகுந்தசந்தோஷத்தையடைந்தேன். இவ்வாறு யானதையறிதற்குக் காரணபூதரான ஐயரவர்களுக்கும் ஐயங்காரவர்களுக்கும் நன்றியறிதலுடையனாய் என்மனப்பூர்வமானவந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

அப்பாட்டு, நன்னூலின்பழையவுரையுள், பொதுவியல் 67-ஆஞ் சூத்திரத்தினுரைமேற்கோளாகக்காட்டப்பட்டது. அதுவருமாறு:—

அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
தரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது. என்பதாம்.

இது பழமொழியின் முதற்பாட்டுரையொடுபொருந்திய சொற்றொடர்களுடையதாய்க் காணப்படுவதாற் பழமொழியின் முதற்பாட்டென்றே கொள்ளத்தக்கதாயுள்ளது. இதனுள், பெரியதனாவிபெரிது என்றது தேகபரிமாணமாத்மா என்னும் ஜைனமதக்கொள்கையைத் தழுவியுள்ளது.

## முக்கியமான சிலபிழைதிருத்தங்கள்.

முதற்பாட்டுரையிற் கெடுத்தற்கூரிய என்றிருப்பதைக் கெடுத்தற்கரிய எனவும், பேருடம்பினையுடையதாதலிற்பெரிதாயது என்றிருப்பதைப் பேருடம்பினையுடையதனாவிபெரிதாயது எனவும், 5-ம்பக்கம் 30-ம்வரியில் அக்ஷ¬ஹாவெள என்றிருப்பதை அக்ஷ¬ஹெளவாஃ எனவும், 7-ம்பக்கம் முதல்வரியிற் பழமொமி என்றிருப்பதைப் பழமொழி எனவும், 16-ம்பக்கம் 28-ம்வரியில் இத்ழிதக்க என்றிருப்பதை இழித்தக்க எனவும், 50-ம்பக்கம் 5-ம்வரியில் நீர்க்காலாகியஒடையை என்றிருப்பதை நீர்க்காலாகிய இ..விசேடத்தை எனவும், 20-ம்வரியில் தீமை முகமுரைக்கும் என்றிருப்பதைத் தீமைமனமுரைக்கும் எனவும், 55-ம் பக்கம் 28-ம்வரியில் யெரிக்க என்றிருப்பதை யெறிக்க எனவும், 99-ம் பக்கம் 14-ம்வரியில் ஒருகூறுகக்கோள்வதற்கும் என்றிருப்பதை ஒரு கூறுகக்கோண்டதற்கும் எனவும், 120-ம்பக்கம் 6-ம்வரியில் உலகு என்றிருப்பதை அரிது எனவும், 125-ம்பக்கம் 20-ம்வரியில் என்றது வேண்டும்பகைவரை என்றிருப்பதை என்றது பகைவரை எனவும், 128-ம்பக்கம் 32-ம்வரியில் ஊடிடும் என்றிருப்பதை ஊடுடுரா எனவும் 135-ம்பக்கம் 13-ம்வரியில் விளங்கிளாய் என்றிருப்பதை விளங்கிழாய் எனவும் திருத்திக்கொள்க.

பத்திராதிபர்

---

உ

# பழமொழி.

பழமொழி என்பது பழைய நூல்களாகிய நாலடியார், நான்மணிக் கடிகை முதலிய பதினெண்கீழ்க்கணக்குக்களுள் ஒன்று. கணக்கு = நூல். இது நேரிசைவெண்பாவும் இன்னிசைவெண்பாவுமாக நானூறுவெண் பாக்களையுடையது; பண்டைக்காலப் பழமொழிகள் ஒவ்வொன்று பாக்கடோறும்வரலாற் பழமொழி என்னும் பெயர்த்தாயிற்று என்பர். "பண்டைப் பழமொழி நானூறும்" என்றுரைக்கும் பாட்டும் ஒன்றுண்டு. இதனை இயற்றினவர் ஆருகதராகிய முன்றுறையரையனார் என்பவர்.

### வெண்பா.

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும்—கொண்டினிதா
முன்றுறை மன்னவ னான்கடியுஞ் செய்தமைத்த
இன்றுறை வெண்பா விவை.

இதன்கண் "பெருத்தது பெரிது" "கன்றுசாவப் பால்கறப்பாரா" என்பன முதலியனவாகப் பற்பலபழமொழிகள் வருகின்றன. பழமொழி என்பதற்கு முன்னோர்வாக்கு என்னும்பொருளுங் கூறலாம். தென்மொழியில்வரும் பழமொழிகள்போல வடமொழியினும் நூலுரைகளிலே ஆங்காங்குவரும் தண்டாபூபிகநியாயம், காகதாலீய நியாயம், சதிபதிநியாயம் முதலிய நியாயங்களையும் பழமொழி என்று சிலர் கூறுவர். நியாயம், ஜநப்பிரவாதம், உலோகவாதம் என்பன வற்றிற்கு வடநூலார்சிலர் பழமொழி என்னும் பொருளுங் கூறுவர்.

இதன்கண்வருங்கவிகளுள்ளே சிலபலகவிகளைப் பரிசீலனஞ் செய்தேம். பெரும்பாலுந் திருட்டாந்தம் என்னும் அணியே ஆங்காங்கு வருகின்றது. உவமை, வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அணி களுஞ் சிறுபான்மைவருகின்றன. திருட்டாந்தவணியை நச்சினார்க் கினியர் தொல்காப்பியத்திலே "வேறுபடவந்த உவமத்தோற்றம்" என்புழியமைப்பர்.

### திருட்டாந்தவணி.

நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்ற முளவெனினுங் காய்ந்திலார்
பண்கொண்ட தீஞ்சொற் பணைத்தோளா யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார்.

இங்கே "யாருளரோ தங்கன்றுசாக்கறப்பார்" என்பது திருட்டாந்தம். சாவக்கறப்பார் என்பது சாக்கறப்பார் என விகாரமாயிற்று. "சாவவென்மொழியீற்றுயிர்மெய்சாதலும்விதி" என்று நன்னூலாருங் கூறுவர். இஃது இன்னிசைவெண்பா.

### உவமையணி.

*மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்*
*உப்பொழிதல் செல்லா வொலிகடல்போல் —மிக்க*
*இனநல நன்குடைய வாயினு மென்றும்*
*மனநல மாகாவாங் கீழ்.*

இங்கே "மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்—உப்பொழிதல் செல்லா,வொலிகடல்போல்" என்பது உவமை. இது நேரிசைவெண்பா.

### வேற்றுப்பொருள்வைப்பணி.

*அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்*
*திங்களுந் தீங்குறுதல் காண்மொற்—பொங்கி*
*அறைப்பா யருவி யணிமலை நாட*
*உறற்பால யார்க்கு முறும்.*

இங்கே "உறற்பால யார்க்கு முறும்" என்பது பொதுப்பொருள். இப்பொதுப்பொருளால் "திங்களுந் தீங்குறுதல்" என்னுஞ் சிறப்புப் பொருள் முடிக்கப்பட்டது. இதனை வேறணியாகக்கொள்வாருமுளர். நாலடியாரில்வரும் "அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்கும்" என்னும் அடிக்கும் இதன் முதலடிக்கும், மேலும் நாலடியாரில்வரும் "தம்மையிகழ்வாரை" என்னுங் கவியின் இறுதியடியாகிய "உறற்பால யார்க்கு முறும்" என்னும் அடிக்கும் இதன் இறுதியடிக்கும் வேறுபாடில்லை. மகடூஉ முன்னிலைகளும், "அலைகடற்றண்சேர்ப்ப" "கடற்சேர்ப்ப" என்பனபோலவரும் முன்னிலைகளும், நாலடியாரில்வரும் முன்னிலைகள் போன்றிருக்கின்றன. இதுவும் நேரிசைவெண்பா.

*ஆஅ மெனக்கெளி தென்றுலக மாண்டவன்*
*மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்*
*தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே*
*தாஅந் தரவாரா நோய்.*

இங்கே "தோஒமுடைய தொடங்குவார்க்கில்லையே—தாஅந் தரவாரா நோய்" என்பது பொதுப்பொருள். இப்பொதுப்பொருளால் மாவலி தன்னுலகம் இழந்தான் என்னுஞ் சிறப்புப்பொருள் முடிக்கப்பட்டது. வேற்றுப்பொருள்வைப்பை வடநூலார் அர்த்தாந்தரநியாசம் என்பார்.

பெரும்பாலுந் திருட்டாந்தம் அணியமைத்து முடித்தலைக் கருதிப் பழமொழி என்னும் பெயரிட்டனரோ என்றும் எமக்கோர் ஐயப்பாடு தோன்றுகின்றது. திருட்ட+அந்தம்=திருட்டாந்தம். இது காணப்பட்டமுடிபு எனப் பொருள்படும். பழமொழிப்பொருளும் முன்னோராற் காணப்பட்ட முடிபுடைய பொருளாகும். உவமையணியுந் திருட்டாந்தவணியும் வேறன்று. வேற்றுப்பொருள்வைப்பின்கண் வைக்கும் பொதுப்பொருளும் பழமொழியாயே பெரும்பாலும் இருக்கும்.

இந்நூலின்கண்வரும் பழமொழி எனப்படுவனவற்றுள்ளும் பல அப்பொழுதைப்பழமொழிகள் என்றே கொள்ளற்பாலன. இப்பொழுது வழங்கும் பழமொழிகள்சிலவற்றை இறுதியிற்பெற்று இலாகவநடையில்முடியும்நூலும் ஒன்றுளது. அதன்பெயர் "பழமொழிவிளக்கம்"; தண்டலையார்சதகம் எனவும்படும். ஆக்கியோர் சாந்தலிங்கக்கவிராயர். இதன்கண், "கங்கையிலேமுழுகினாலும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரைக்காயாகாது" "காதவழிபேரில்லான் கழுதையோடொப்பன்" "பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமணபோசனஞ் செய்தல்" என்பன முதலியனவாகப் பல பழமொழிகள்வருகின்றன. சில காட்டுதும்.

## பழமொழிவிளக்கம்.

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும் பிறர்க்குறுதி தனைச்சொன்னாலும்
அங்கனல கினிற்சிறியோர் தாமடங்கி நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையா ரேசொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படிந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரைக் காயா காதே.

ஓதரிய தண்டலையா ரடிபணிந்து நல்லவனென் றுலக மெல்லாம்
போதமிகப் பெயருடனே புகழ்படைத்து வாழ்பவனே புருட னல்லால்
ஈதலுட னிரக்கமின்றிப் பொன்காத்த பூதமென்ன விருந்தா லென்ன
காதவழி பேரில்லான் கழுதையோ டொப்பனெனக் கழற லாமே.

இப்பழமொழிவிளக்கம் நிற்க. இந்தப் பழமொழி என்னும்நூலிலே வருஞ் சொற்களும், சொற்றொடர்களும், கதைகளும், குறிப்புப் பொருள்களும் பெரும்பாலும் அரிதுணரற்பாலன. இங்கேவரும் புல்லம், அணல், புகா, ஈன் முதலிய சொற்கள் நிகண்டுநூல்களும், இலக்கியங்களும்நோக்கி உணரற்பாலன. கற்றடி சாக்கறப்பார் முதலியன இலக்கணநூல்கள்நோக்கி உணரற்பாலன. பலராமன்கதை,

இராவணன்கதை முதலியன பாரதராமாயணாதிகள் நோக்கி உணரற்பாலன. குறிப்புப்பொருள்களெல்லாம் பலநூல்கள் பரிசீலனஞ்செய்து உணரற்பாலன. புல்லம்-எருது. அணல்-மிடறு. புகா-சோறு. ஈன்-இவ்விடம். "ஈனோர்க்குரைப்பாம்" எனச் சீவகசிந்தாமணிகாரருங் கூறுவர். கற்றடி-கன்றினடி.

பழையநூலுரையாசிரியர் பலர் இப்பழமொழியிலிருந்து கவிகளுங் கவிப்பாகங்களுமாகத் தத்தம் உரைகளிலே பல உதாரணங்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவைகளைச் சீவகசிந்தாமணியுரை, சிலப்பதிகாரவுரைமுதலியனநோக்கியறிக.

இதற்குப் பழையவுரையும் ஒன்றுண்டு. அதனையுந் தழுவிக்கொண்டு குறிப்புரை ஒன்று இந்தச் செந்தமிழிலே பதினான்காந் தொகுதிதொடங்கிப் பாகம்பாகமாகவருகின்றது. இக்குறிப்புரை வடமொழி தென்மொழி நூல்களுக்கு இணக்கமும், தருக்க இலக்கணநுணுக்கமும், பெருக்கமும், பழமொழிகளும், பிறவுமுடையது. அதனை நாமும் வாசித்துவருகின்றோம். அதன்கண் வான்மீகம், நீதிசாரம், குவலயாநந்தம் முதலியவாகச் சில வடமொழி உதாரணங்களும், சிந்தாமணி, கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களும், நாலடியார் நான்மணிக்கடிகை முதலிய நீதிநூல்களுமாகப் பல தென்மொழி உதாரணங்களும் ஆங்காங்குக்காட்டப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியச் சேனாவரையம், பரிமேலழகருரை முதலிய உரைச்சான்றுகளும் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வுரை இலக்கியலக்கணங் கற்பவர்களுக்கும் நீதிகளைக் கற்பவர்களுக்கும் பெரிதும் பயன்கொடுக்கும்.

இதனை எழுதிப் பிரகடனஞ்செய்துவருவோர் செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமான். திரு. நாராயணையங்காரவர்கள். ஐயங்காரவர்கள் இவ்வாறாய உரைகளையும், தமிழ்வளர்ச்சிக்குரிய வேறுவிடயங்களையும் எழுதிப் பிரகடனஞ்செய்தல் செந்தமிழ்வளர்ச்சிக்குரியதேயாம். இறைவனும் அருள்புரிக.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

உ

சிவமயம்.

# கோகழி விளக்கம்.

புண்ணியபூமியாகிய நம் பரதகண்டத்திற் சைவமுதலிய வைதிகசமயங்கள் குன்றிச் சமண் பௌத்தமுதலிய புறச்சமயங்கள் மலிந்து தலையெடுத்தோங்குங்காலத்துத் திருவவதாரஞ்செய்து அங்ஙனம் குன்றிய சைவமுதலிய வைதிகசமயங்களை நிலைநிறுத்தினவர்களில், நம் ஸ்ரீ மணிவாசகப்பெருந்தகையாருமொருவர். இப்பெருமானை, இறைவன் "மதுரைமாநகரிற் குதிரைமாறியும், விண்பொருமுடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்" தொண்டராகக்கொண்டமை யாவருமறிந்ததொன்றேயாம். இப்பெருமான் வைதிகசைவராகிய யாமெல்லாம் இறைவன் அடிப்புணையைச்சேர்ந்து பிறவிப் பெருங்கடல்நீந்தி உய்யும்வண்ணம் திருவாசகம், திருக்கோவையார் என்னும் அரும்பெருநூல்களைத் திருவாய்மலர்ந்தருளினர். இந்நூல்களின் அருமைபெருமைகளை நம் தமிழுலகம் நன்கறியுமாகலான் இவைகளைச் சிறப்பித்துக் கூறுதல் மிகையென விடுத்தேன்.

அவற்றுள்; திருவாசகமென்னும் அரும்பெருநூலின் முதற்கண்ணுள்ள திருவகவலின்கண் ஒரு தொடர்மொழிக்கு அறிஞர்பலரும் பற்பலவிதமாகப் பொருள்கூறுகின்றனர். அதன் உண்மைப் பொருளைக் காணவேண்டுமென்னும் ஆசை எளியேனையும் பிடர்பிடித்துந்த, அதன்வயப்பட்டு என் அறிவின்சிறுமையையும், அந்நூலின்பெருமையையும் ஓராது, யானும் இதனை மேற்கொள்வேனாயினேன். இதனை யான் மேற்கோடல்,ஒரு நரி தன்வாலளவுகொண்டு கடலின் ஆழத்தைக் கணிப்பேனெனக் கழறுவதையொத்து, ஆன்றோர்பலர்க்கும் விடாநகைப்பைவிளைக்குமென்பது அடியேன் றுணிபு. இதுநிற்க.

அத்தொடர்மொழிதான் யாதோவென்னில், "கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க" என்பதேயாம். இத்தொடர்மொழிக்கு அறிஞர்பலரும் உரைக்கும் உரையுள் ஒருசாரார்,

கோகழி—திருவாவடுதுறையின்கண்ணே, ஆண்ட—(திருவடி சூட்டித்தீட்சைசெய்து) அடிமைகொண்ட, குருமணிதன்—பரமாசாரியனுடைய, தாள்வாழ்க—திருவடிவாழ்க, எனவும், மற்றொருசாரார்,

கோகழி—பெரிய (திருப்பெருந்) துறையிடத்து, ஆண்ட—(திருவடிசூட்டித்தீட்சைசெய்து). அடிமைகொண்ட, குருமணிதன்—பரமாசாரியனுடைய, தாள்வாழ்க—திருவடிவாழ்க, எனவும், பொருள்கூறுகின்றனர். இவ்விருசாராருள் முன்னையோரை இத்தொடர்மொழிக்குத் திருவாவடுதுறையைப் பொருளாகக்கோடற் கேதுவென்னையென வினவின் "கோகழி" என்பது வேறோர்தானத்தையும் வரைந்துசுட்டாது, திருவாவடுதுறையையே வரைந்துசுட்டல்வேண்டும்; ஏனெனின் கோ வென்பது பசுத்தன்மை; கழி யென்பது கழிந்தவிடமாம்; ஆதலால் அம்பிகைக்குப் பசுத்தன்மைநீங்கிய இடமாகிய அதனையே சுட்டவேண்டுமென விடை யிறுக்கின்றனர். இனி, மற்றொருசாராரை வினவின், அவர், அப்பெருமானொடு ஓர்இயைபுமில்லாத திருவாவடுதுறையை இத்தொடர்மொழிக்குப் பொருளாகக் கோடல் சிறிதும் ஏலாதாம்; ஏனெனில் ஸ்ரீ மணிவாசகப்பெருந்தகையை இறைவன் ஆட்கொண்ட முதற்றானம் திருப்பெருந்துறையாகலான், அத்தொடர்மொழி அதனையே வரைந்துசுட்டல்வேண்டும்; வேறொன்றை வரைந்துசுட்டுதல் பொருத்தமின்றாமென்கின்றனர். இவ்விருவர்கூற்றுள், முன்னையோர்கூற்று, பெயரொற்றுமையொன்றையேகொண்டு பொருள்கொள்ளுவதாகப் புலனாகின்றது. இத்தொடர்மொழியைத் திருவாய்மலர்ந்தருளிய நம்பெருந்தகையாரொடு யாதோரியைபும் நன்குபுலப்படுமாறின்றாமென்க. பின்னையோர்கூற்று, அப்பெருமானை ஆட்கொண்டமுதற்றானம் திருப்பெருந்துறையாதலான், அவ்வியைபுபற்றிக்கூறுவதாகப் புலனாகின்றது. அஃதொருவாறு பொருத்தமாகக் காணப்படினும் இத்தொடர்மொழி இவர்கூறும் பொருளைப்பயந்து நிற்கின்றதா? இன்றா? என்பதைப்பற்றியாய்தலொருதலையாமாகலானதனைப்பற்றிச் சிறிதாராய்வாம்.

கோ என்னு மோரெழுத்தொருமொழி பலபொருளுணர்த்துமாயினும், இவர்கூறுஞ் சிறுமைக் கெதிர்மறையாகிய பெருமையென்னும் பண்புணர்த்திவருவதாக யாண்டும்புலப்படவில்லை. அச்சொல்

பரவைவழக்கினும், புலனெறிவழக்கினும், தலைமைப்பண்புணர்த்தி வருவதாகப் புலப்படுகின்றது. இப்பண்புபற்றியே 'பெருங்கோப் பெண்டு' 'கோப்பெருஞ்சோழன்' 'கோநகரி' முதலிய சொற்கள் எழுந்தனவென்க. இனி, கழியென்பதற்கு "கழியென்ப மிகுதி காயல் கானலுப் பளமென்றாகும்" என்று காணப்படுகின்றனவேயன்றி, துறையென்னும்பொருள் காணப்படவில்லை. இனி, இவர் 'கழி' யென்பது ஆகுபெயராய்த் துறையையுணர்த்திற்றென்று கூறுவாராயின், வடமொழிநிகண்டுகளினும், தமிழ்நிகண்டுகளினும், ஆகுபெயர்களையெல்லா மியற்பெயர்போல ஆசிரியர்கள் எடுத்தோதி யிருத்தலான் இதனையும் எடுத்தோதியிருக்கவேண்டும். அங்ஙன மோதாமையான் ஆகுபெயரெனக்கோடலு மேலாதென்க. இனி, இவ ராகுபெயர்களையெல்லாம் நிகண்டுகளில் எடுத்தோதவேண்டுவ் தி நியமமின்று, ஆதலான், "கழி"யென்ப தாகுபெயராய்த் துறையையே உணர்த்திற்றென்றுகோடுமென்பாராயின், இத்தொடர்மொழியைத் திருவாய்மலர்ந்தருளிய போதவூர்பேவிய வாதவூரடிகள் இவர் கூறி யாங்குக் 'கோகழியே' திருப்பெருந்துறையென்று கொண்டனரா? கோகழிவேறு, திருப்பெருந்துறைவேறு, என்று கொண்டனரா? என்று நோக்குவோமாயின் 'பண்டாயநான்மறை' என்னுந் திருப் பதிகத்துள்,

"நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
வெண்ணி யெழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்"

என்னுந்திருப்பாட்டில், திருப்பெருந்துறை வேறு ; கோகழி வேறு ; எனக்கொண்டிருப்பது,—இத்திருப்பாட்டினை "உத்தரகோசமங்கை மன்னியிருந்தானை, கோகழிக்கரசை நம்மிடர்கள் போயகல, பெருந் துறையை நண்ணிக்காண்" எனக் கொண்டுகூட்டின் வெள்ளிடை விலங்கலாமென்க. இதனாற் கழி யென்பது ஆகு பெயராய்த் துறை யை உணர்த்திற்றென்ப தொருசிறிதும் பொருத்தமில் கூற்றேயா மென்க.

இனி, இத்தொடர்மொழிக்கு வேறுநூல்களை ஆதாரமாகக்கொண்டு பொருள்காணாது, நம்பெருந்தகையார் திருவாக்கைக்கொண்டே பொருள்காண்டல் மிக்கவலியுடைத்தாமாகலின், அதனைக்கொண்டே

அத்தொடர்மொழிப்பொருளை நிறுவுகின்றேன். நம் பெருந்தகையார் சீரியதிருக்கோவையாரில்,

"சங்கந்தருமுத்தியாம்பெறவான்கழி தான்கெழுமிப்
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறுலவு
துங்கமலிதலையேந்தலினைந்திழைதொல்லைப்பன்மா
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே"

என்னுந்திருப்பாட்டில் 'கோகழி' யென்பதனையே 'வான்கழி' யெனக் கூறியிருப்பதாகப்புலனாகின்றது. அத்திருப்பாட்டிற் குறை கண்ட நல்லறிவுடைய தொல்பேராசிரியராகிய பேராசிரியர், இப்பகுதிக்கு இருவிதமாகப் பொருள்கண்டிருக்கின்றனர். யாங்ஙனமெனின், வான்கழி தான்கெழுமி—ஆகாயத்தைக்கடந்துநின்ற தான் ஒரு வடிவு கொண்டுபொருந்தியெனக்கொண்டு வான்கழியென்பது சிவலோகமெனினும்பொருந்துமென்று அமைதிகூறலின்; தான் கெழுமி யென்பதற்கு அச்சிவலோகத்துத் தானொரு வடிவுகொண்டு அதனிடத்துப்பொருந்தியெனவும் பொருள்கோட லாசிரியர்துணிபாமென்க. கோ வென்பது ஆகாயத்தின் பரியாயப்பெயராகலான் 'வான்கழி' யென்பதனையே நம்பெருந்தகையார் 'கோகழி' எனக் கூறினாரென்க. பேராசிரியர் 'வான்கழி' யென்பதற்குச் சிவலோகமெனப் பொருள் கோடலின், கோகழியாண்ட குருமணிதன் றாள்வாழ்க" என்பதற்கும் சிவலோகத்தையாண்ட பரமாசாரியன் திருவடிவாழ்கஎனப் பொருள் கோடலே பொருத்தமுடைத்தாம் என்க. அன்றியும், நம்பெருந்தகையார் 'செல்வர் சிவபுரத்துள்ளார்' என்றும், 'சிட்டனே சிவலோகனே' என்றும், "சிவலோகநாதனை வரக்கூவாய் குயிலே" என்றும் கூறியதூஉம் இதனை வலியுறுத்துமென்க. இங்ஙனம் பரியாயப்பெயராற் கூறுதல் பண்டையார்வழக்காமென்பது, அத்தினபுரியைக் "குருதிக்கோட்டுக் குஞ்சரநகரம்" என்றும், விளம்பழத்திற்கு வரும் யானைநோயினைத் "தூம்புடைத்துளைக்கைவேழம்" என்றும் கூறியிருத்தலான் இனிதுபுலனாமென்க.

நந்தாசாரியார்,
உபாத்தியாயர்,
தமிழ்ச்சங்கக்கலாசாலை,
மதுரை.

# பாண்டியன்மாகீர்த்தி.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனாரியற்றியுள்ள சிறப்புப்பாயிரத்தினிடையில் "நிலந்தரு திருவிற் பாண்டியனவையத்து" எனக் கண்டிருக்கிறது. இதனால் 'நிலந்தருதிருவிற்பாண்டியன்' என்னும் இயற்பெயருடையானோர் தென்னவனது அவைக்கண்ணே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதென்பது வெளிப்படை. ஆயினும் அதற்கு முதன்முதலில் உரையெழுதிய இளம்பூரணவடிகள் "மாற்றாரதுநிலத்தினைத் தன்கீழ்வாழ்வார்க்குக் கொண்டுகொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன்மாகீர்த்தியதவைக்கண்ணே" என வரைந்துள்ளார். இவரதுகருத்துப்படி அப்பாண்டியனது இயற்பெயர் 'மாகீர்த்தி' யென்பதாயிற்று. அங்ஙனமன்றெனின் அவர் 'நிலந்தருதிருவின்' என்பதனைப் பாண்டியன்பெயருக்கு அடைமொழியாகக் கொள்ளச் சிறிது மிடமில்லையென்பது. அன்றியும் முற்காலத்துப் பாண்டியர்களின் இயற்பெயர்களெல்லாம் பழமையான தமிழ்நூல்களிலே தமிழ்ச்சொற்களாகவே வழங்கப்பெற்றிருக்க, அவனொருவனுக்கு மட்டிலும், 'மாகீர்த்தி' யென்னும் பெயரை அவ்வுரையாசிரியர் ஏனோ கொண்டனரென்பது இதுகாறும் யாருக்கும் விளங்கப்பெற்றிலது. இவ்வுரையை எழுதும்போது அவரது மனக்கண்முன்னர் "நல்வேள்வித் துறைபோகிய - தொல்லாணை நல்லாசிரியர் - புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பி - னிலந்தரு திருவி னெடியோன் போல-வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்-பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி" என்ற அடிகள் நிற்கப்பெற்றிருப்பின் அவருக்கு இங்ஙனம் உரை கூறத்தோன்றியிராது. அவ்வடிகளோ பாண்டியன்நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார்பாடிய மதுரைக்காஞ்சியிலுள்ளன. அவற்றைப் பிறருரையினுதவியின்றி உற்றுப்பார்க்கு மாராய்ச்சிவல்லோருக்குத் தொல்காப்பியத்தைப் புலப்படுத்திய புகழ்சால்சிறப்பின் (எனின் மாகீர்த்தியனான) நிலந்தருதிருவிற்பாண்டியனையே அவை குறிக்கின்றனவென்று தெற்றெனவிளங்கும். ஆங்குப் பாண்டியனென்றது 'நெடியோன்' என்ற தென்னையெனின், "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:"-நெடியோனல்லன் நிருபதியாகான்—என்னும் பண்டையவழக்குப் பற்றிப் பாண்டியனும் நெடியோனதுகூறேயாவனெனக் கொள்ளவும் திருவென்னுஞ்சொல்லுக்கியையவும் அது வரப்பெற்றதென்க.

இதனை, "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்-றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" என்னும் வெட்சிக்கரந்தையிற்கூறிய சூத்திரத் தானு முணர்க. இனி நெடியோனென்பது பெரியோனெனப் பொது வாய்ப் பொருள்பெற்று அடையேற்றபின்னர்ப் பாண்டியனைக் குறி த்ததெனினு மமையும். "எங்கோ வாழிய......முந்நீர் விழவி னெடி யோ-னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." என்று புறநானூற் றில் நெட்டிமையார் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப்பா டிய ஒன்பதாம்பாட்டில் வேலைவடிம்பலம்பநின்ற பாண்டியனை 'நெடி யோன்' என்று கூறியதும் உணரற்பாலது. ஆகவே 'நிலந்தருதிரு விற்பாண்டியன்' என்பதே அவனது இயற்பெயராமென்பது பெறப் பட்டது.

இளம்பூரணவடிகளுக்குப் பிற்காலத்து கி. பி. ஒன்பதாம்நூற் றாண்டிலோ பத்தாம்நூற்றாண்டிலோ களவியலுக்குரையெழுதிய யாரோவொருவர், அதன் முப்பத்தைந்தாஞ்சூத்திரத்து உரையை விரிக்கும்போது, "தேவரும் அசுரரும் அமர்செய்தகாலத்துத் தேவர் களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒருப்பல்யானெ னப் பாண்டியன் 'மாகீர்த்தி' சந்துசெய்வித்ததுபோல்" என ஓர் கதைகூறுமுகத்தானே 'மாகீர்த்தி'யென்பதனைப் பாண்டியனது இயற்பெயரெனத் திரிபுடவுணர்த்தினார். அக்களவியலுரை நக்கீர னாருரைத்ததென மயங்கி அடியார்க்குநல்லார், தமது சிலப்பதிகார வுரைப்பாயிரத்தில் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம்புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்து" என்றும், வேனிற்காதை யுரைத்தொடக்கத்தில் "நாலாயிரத்துநானூற்றுநாற்பதிற்றியாண்டு (தலைச்சங்கம்) இரீயினார் காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள் ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டி யன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான்" என்றும், ஓரிடத்து மாகீர்த்தியு மிடைச்சங்கமுமெனின் மற்றோரிடத்துச் சயமாகீர்த்திய னும் தலைச்சங்கமுமென ஒருவனையேபற்றி முன்னுக்குப்பின் பிறழ்ந் தும் கூட்டியும் எழுதியுள்ளார். ஆயினும் அவர் 'மாகீர்த்தியான' 'சய மாகீர்த்தியான' என்னுஞ்சொற்களைப் பாண்டியனது இயற்பெயருக்கு

அடைமொழிகளாகக் கொடுத்திருக்கின்றமையின், பனம்பாரனாரது கொள்கைக்கு அதுபற்றியமட்டில் அவர் மாறுபடக்கூறினாரென்பதற்கில்லை. மாங்குடிமருதனாரதுநோக்கமும் இதனையொத்திருப்பது உற்றுணரற்பாலது. களவியலுரையென்பது இளம்பூரணவடிகளியற்றியதென இக்காலத்துச் சிலர் கருதுவாராயினர். குமரியாற்றிற்குத்தெற்கில் (தமிழ்நாடல்லாத) பிறநாடிருந்து கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய இளம்பூரணவடிகளும், ஆங்குத் தலையிடைச் சங்கத்துத் தென்மதுரைகபாடபுரங்களிருந்த தமிழ்நாடு கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய களவியலுரைகாரரும் ஒருவரெனக்கருதுவது எவ்வாற்றானுமமையாதென்க.

இதுநிற்க, நச்சினார்க்கினியர் "மாற்றாரது நிலத்தைக்கொள்ளும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தியவையின்கண்ணே" என்னுமிடத்து 'மாகீர்த்தி' யென்பதனை இயற்பெயராக்கொண்டதுமன்றி 'அரிறப' என்பதனை விரித்துரைக்குமிடத்து அப்பெயரிய பாண்டியனுக்கு இருபத்துநாலாயிரம் யாண்டு ஆயுளுங் கற்பித்துள்ளார்! அதனையும் மெய்யாகக்கொள்ளின், களவியலுரைகாரரது கற்பனைப்படி தலையிடைகடைச்சங்கமொன்றனுக்கு (4440+3700+1850=) 9990 வருஷங்களாக அவனது காலத்திலேயே இரண்டு மூன்று தலையிடைகடைச்சங்கங்கள் வேண்டப்படுமெனவே அஃது ஒருசிறிதும் பொருந்தாதாம். இனி இளம்பூரணவடிகள்காட்டிய வழியில் நச்சினார்க்கினியர்போற்சென்றுள்ள சிவஞானமுனிவரையும் அரசஞ்சண்முகனாரையும்பற்றிக் கூறுதற்கு யாதுமிலது.

ஆகவே 'மாகீர்த்தி' என்னும்பெயர் பின்னோர்வழக்கில் வழிபிறழ்ந்துவந்ததெனவும், தொன்றுதொட்டுப்பயின்றுவந்தபெயர் 'நிலந்தருதிருவிற்பாண்டியன்' என்பதேயாமெனவும் நாட்டப்பட்டதென்க.

பண்டித, S. சுப்பிரமணிய சாஸ்திரி.

தஞ்சை.

ஸ்ரீ:

# மும்முரசம்.

---

நம் பழைய தமிழரசர்கள் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியெனக்கொண்டுகடைப்பிடித்து,ஊக்கத்துடன்செய்துவந்த அறங்கள் மூன்றும். அவை கண்ணோடாதுமுறைசெய்தல், வரையாதுஅளித்தல், கதித்தெழுந்துவேறல் என்பனவாம். இப் பிற்கூறியவேறலும் அறமாமோவெனின், ஆம்; என்னை? 'வருதார்தாங்கி' என்னும் புறப்பாட்டில்(62) 'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்' என்றவிடத்து 'அறத்தின்மண்டுதலாவது படைபட்டபின் பெயராது சென்று, இருவேந்தரும் பொருதல்' என்று அதன் உரையாசிரியர் கூறுமாற்றான் அறிக. அம் மூன்று அறங்களும் அக்கால அரசரது மனத்திற் பசுமரத்தாணிபோலப் பதிந்திருந்தனவென்பதற்குப் பல பலசான்றுகள் காணலாம்.

தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் தன்னைச் சேரனும் சோழனும் இளைஞனென்றிகழ்ந்ததைக் கேட்டபோது,

"படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக!
*   *   *   *
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே" (புறம்-72.)

என்று வஞ்சினங்கூறினன்

இக் கூற்றினின்றும் 'சினங்கெழுவேந்தரை அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு ஒருங்ககப்படேஎனாயின்' என்றதனால் அவனது மறக்கூறுபாடும், 'என்னிழல்வாழ்நர் சென்னிழற்காணாது கொடிய

னெம்மிறையெனக் கண்ணீர்பரப்பிக் குடிபழிதூற்றுங் கோலே னாகுக' என்றதனால் அவனது முறைதிறம்பாமையும், 'புரப்போர் புன்கண்கூர, இரப்போர்க் கீயா இன்மையா னுறவே' என்றதனால் அவனது கொடைக்கடனிறுத்தலும் வெள்ளிடைவிலங்கல்போல் விளங்கிக்கிடப்பன.

சோழன் நலங்கிள்ளிசேட்சென்னி என்பான், தன்தாயத்தானை நெடுங்கிள்ளிமேற்கோபித்து வஞ்சினம்மொழியும்போது,

"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
யீயென இரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினும் கொடுக்குவ னிந்நிலத்
தாற்ற லுடையோர் ஆற்றல் போற்றாதென்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன்போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே" (புறம்-73.)

என்று மொழிந்தனன். இதினின்றும் அவனது அருங்கொடையும், பெருந்திறலும், நெறியிற்பிறழாக் கடைப்பிடியும் அதன் விளைவாய முறைபிறழாமையும் விளங்குவனவாம். இவ்வாறே ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் தன்பகைவனான சோழன்மேற் பகைத்தபோது,

"என்னொடு பொருதும் என்ப வவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக—

* * *

மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த

தென்புலங் காவலின் ஒரீஇப் பிறர்
வன்புலங் காவல் மாறியான் பிறக்கே” (புறம்-71.)

என்று வஞ்சினம் மொழிந்தனன். இம்மொழியினின்றும் மேற்சொல்லிய மூன்றறங்களும் அரசர்க்குத் தலைமைபெற்றன என்பது புலனும்.

அக்கால அரசரையன்றிப் புலவர்களும் வேந்தருக்கு அம் மூன்றறங்களுமே சிறப்புடையனவென்று எடுத்துக்காட்டாநிற்பர். முதலாவது முறைசெய்தலைப்பற்றி வற்புறுத்தும்போது நரிவெரூஉத்தலையார் என்றபுலவர், சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறையை விளித்துப்பாடும்போது,—‘அருளும் அன்பும் நீக்கி நீங்கா, நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி’ (புறம்-5) என்றும், காரிகிழார் என்றபுலவர், பாண்டியன்பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியைவிளித்துப்பாடும்போது,—‘விரிசீர்த், தெரிகோல் ஞமன் போல ஒருதிறம், பற்றலியரோ’ (புறம் - 6) என்றும், பிசிராந்தையார் அறிவுடைநம்பியைநோக்கி,

“அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே” (புறம்-184)

என்றும், வெள்ளைக்குடிநாகனார், தமது நிலங்களுக்கு இறைசெலுத்த மாட்டாமற்போனபோது குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நோக்கி,

“அறம்புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற றோரே”

என்றும்,

“நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரமோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே” (புறம்-35)

என்றும் கூறுவதினின்றும் அதனை அறிந்துகொள்ளலாம்.

கொடைக்கடனைப்பற்றி, உறையூர் முதுகண்ணன்சாத்தனார், சோழன் நலங்கிள்ளிசேட்சென்னியைநோக்கி,

"வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லை யாகுமதி—அருளிலர்
கொடாமை வல்லர் ஆகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே" (புறம்-27.)

என்றும்,

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைந்நிற் போற்றா மையே" (புறம்-28.)

என்றும் கூறி, 'அறஞ்செய்யாதானை அறஞ்செய்கவென' வற்புறுத்தினர்.

ஆவூர் மூலங்கிழார், பாண்டியன் இலவந்திகைத்துஞ்சிய நன்மாறன் பரிசில்நீட்டித்தபோது,

"ஒல்லுவ தொல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலு மிரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
ஒல்லா தொல்லும் என்றலும் ஒல்லுவ
தில்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்தா கியரினி இதுவே" (புறம்-196.)

என்று உளையக்கூறி இடித்தனர்.

இனி வீரத்தைப்பற்றிக் கூறும்பொழுது மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார், நன்மாறனைநோக்கி,

"கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனை
புகழொத் தீயே இகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியதுமுடித்தலின்" (புறம்-56.)

என்றும், குமட்டூர்க்கண்ணனார், நெடுஞ்சேரலாதனைப் பாடுங்கால்,

"அரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநகர் அரசுதுயி லீயாது
மாதிரம் பனிக்கும் மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிது"

என்றும், மாறோக்கத்துநப்பசலையார், குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன் இறந்தபோது,

"செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே" (புறம் 226.)

என்றும் பாடி, அவ்வீரத்தைச் சிறப்பிப்பர்.

இவ்வாறு புறத்திணைத்துறையிலேயன்றி அகத்திணைத்துறையிலும் நெறிமுறையின்வழீஇயினரை,

"அரிவை, புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீயர்" (குறுந்-292,)

என்று, பரணரும், கொடையைப்பற்றிப் பிரிவச்சங்கூறும் தலைமகன் கூற்றாக, 'நிற்றுறந் தமைகுவெ னாயி னெற்றுறந், திரவலர் வாரா வைகல், பலவா குகயான் செலவுறு தகவே'(குறுந்-137)என்று பாலை பாடிய பெருங்கடுங்கோவும், வீரத்தைப்பற்றிக்கூறுமிடத்து, 'பெரும் புண், ஏர்த்தழும்பன் ஊணூராங்கண், பிச்சைசூழ் பெருங்களிறுபோல எம், அட்டில் ஓலை தொட்டனை நின்மே' என்று பரணரும் கூறுவர். இவற்றிற்கு இன்னோரன்ன பலப்பல உதாரணங்கள் காட்டலாம்.

இக்கூறிய மூன்று அறங்களையும் தாம் மேற்கொண்டதற்கு இலச்சினையாக அரசர்கள் தமதுகடைத்தலையில் மூன்றுமுரசங்களை வைத்திருந்தனர். அம்மூன்றற்கும் நீதிமுரசம், கோடைமுரசம், வீரமுரசம் என்று பெயர்வழங்கிவந்தது. அம்முரசங்கள் அரசர்களாற் கணிமொழிந்த சுபதினங்களிலே கொள்ளப்படுவனவாய், வெவ்வேறு

குரல்தரும்படி முழக்கப்பெற்று, இக்காலத்தில் அரசன்கோயிலில் இன்னது நிகழ்கின்றது என்பதை அறிவித்தற்குச்சிறந்தகருவிக ளாக உதவிவந்தன. 'ஒருநாள் முதலன பத்துநாழிகையும் அறத்தின் வழி ஒழுகிப் பின்பத்துநாழிகையும் இறையின்முறைகேட்டுச் செய்த பொருளைப் பரிசிலர்க்குக்கொடுத்து மகிழ்ந்திருத்தல்' (புறம்-69-உரை) மரபாதலால், அக்கடும்பகலின் முதலிலும் கடையிலும் நீதி முரசத்தையும் கொடைமுரசத்தையும் முறையேமுழக்கி, முறை வேண்டுவார்க்கு முறைசெய்து, பின்பு பரிசிலர்க்குக்கொடுத்து வந்தார்கள்.

வீரமுரசமோ (1) நாட்டிற் போர்நிகழ்ந்துள்ளதென்பதை அறி வித்தற்கும், 'செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி, வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப், பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி, ஒருமகன் அல்லது இல்லோள், செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே'(புறம்-279)பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை, வளி பொரு தெண்கண் கேட்பின்,அதுபோ ரென்னும் என்னையும் உளனே' (புறம்-89) (2) போர்முனையின்கண் முழக்குதற்கும், 'புயலேறு...... குன்றுதூ எறியும் அரவம் போல, முரசெழுந் திரங்கும் தானையொடு தலைச்சென்று,அரசுபடக் கடக்கும் உரைசால் தோன்றல்.(புறம்-211) மயிர்க்கண் முரசும், நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம், மண்ணக மருங்கினென் வலிகெழு தோள்'(சில. இந்தி ) (3) வென்றவுடன் வென்றிதோன்ற ஒலித்தற்கும், 'பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின், கடியுடை முழுமுதல் துமிய எஎய், வென்றெறி முழங்கு பணை' (பதி-11) 'இவ்வெண் நிலவின், வென்றெறி முரசின் வேந்தர்' (புறம்-112) (4) வென்றநாட்டின் குடிகளைத் தம்குடைக்கீழ் வருக வென்று பிரசுரஞ்செய்தற்கும், 'வலம்படு வியன்பணை . கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவ, ரணங் காணுது மாதிரந் துழைஇய நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகவிந் நிழலென' (பதிற்-17) உபயோகிக் கப்பட்டு வந்தது. 'அரசர்க்குச்சிறந்த மறப்புகழ் மற்றைப்புகழினும் மிக்கது' (பதிற்-12, உரை ) என்பனவாகலான் இவ் வீரமுரசம் அவ் வரசராற் பெரிதும் அபிமானித்து வணங்கப்பெற்றுவந்தது.

இனி இவ் வீரமுரசம்செய்துகோடலின்வரலாற்றை ஆராய்வாம். இதன்விளிம்புமரமோ காழ்கொண்ட கருமரத்தாற்செய்யப்பெற்று

இருட்சிபொருந்தி உட்குவரத்தோன்றும். இதனை 'மாசற விசித்த வார்புறு வள்பின், மைபடு மருங்குல்' என்னும் 50-ம் புறப்பாட்டின் 'மைபடுமருங்குல்' என்பதற்கு, 'கருமரத்தாற்செய்தலான் இருட்சிபொருந்தியபக்கம்' என்று அதன் உரையாசிரியர் கூறுமாற்றான் அறிக. இக் கருமரந்தான் பகைவரதுநாட்டினின்றும் வென்று கொணர்ந்ததாகும். அப் பகைவரது காவன்மரத்தையே வெட்டித் தறித்துத் துண்டாடி, அவற்றை வண்டிகளிலேற்றி அவ்வண்டிகட்கு அப் பகையரசரது பட்டத்தியானைகளைக் கடாக்களாகப்பூட்டித் தம் நாடுகொணர்ந்துசேர்த்து முரசுசெய்துகொள்ளுதல் சிறந்த வீரமெனப்படும். இப்படிச்செய்தான் சேரன் கடல்பிறகோட்டிய செங்குட்டுவன். இதனை,

"மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்த"

என்ற 44-ம் பதிற்றுப்பத்தாலும், இதன்கண்வந்துள்ள 'பூட்டி' என்றதற்கு "வாலிழைகழித்தநறும்பல்பெண்டிற், பல்லிருங்கூந்தல் முரற்சியாற் குஞ்சரவொழுகைபூட்டி' என இதன்பதிகத்துவந்தமையால் அம் மகளிர்கூந்தன் மயிர்க்கயிற்றாற்பூட்டியென்று அதன் உரையாசிரியர் கூறுமாற்றாலும் அறிக. இம் மோகூர்மன்னன் செங்குட்டுவனது நட்பினனான 'அறுகை' என்பானது பகைவனாய் அவ்வறுகை என்பானை வருத்திவந்தவன். அதனாற் செங்குட்டுவனுக்குச் சினஞ்சிறந்தது.

இம் முரசினுக்குப்போர்த்தற்குரிய தோல்கொணர்வதோ பெருவியப்பானது. எத்தகைய இடபமானது தனது மொய்ம்பினாலே சினமிக்க புலியொன்றனோடுபொருது அதனைத் தனது கூர்ங்கோட்டாற்குத்திக்கொன்று, கோட்டுமண்கொண்டு முக்காரமிட்டுச் செம்மாந்துசெல்லுமோ அவ்விடபராசனது ஆவியிகந்தபின்பு அதன் தோலை உரித்து, மயிர்சீவாதேகொணர்ந்து அம்முரசினுக்குப் போர்த்து, முடக்கம்முதலிய குற்றங்களுண்டாகாவண்ணம் வலித்துப் பிணித்திருக்குவார்கள். இதனைச் சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்த காதை அடி 88-ல் 'மயிர்க்கண்முரசு' என்பதற்கு அடியார்க்குநல்லார்

எழுதிய குறிப்புக்களாலும், 'மாசறவிசித்தவார்புறுவள்பின்' என்ற புறம் 50-ம் பாட்டாலும் அறிக. 'புனைமருப் பழுந்தக் குத்திப் புலி யொடு பொருது வென்ற, கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனைகுரல் முரசம்' (சிந்-முத்தி-301). என்றார் பிறரும்.

இனி இம் முரசினைப்பேணி வழிபடுவழக்கைச் சிறிதுகூறுதும். இம் முரசம் வெண்மைமிக்கதும் பூக்களாற் பொலிந்துவிளங்குவதுமான மெல்லியசேக்கைபரப்பப்பெற்ற சிறந்தகட்டிலிலே வைக்கப்படும். நித்தமும்வங்கிய முழக்கத்துடன் நீர்த்துறைக்கு எடுத்துச்சென்று பயபக்தியுடன் கழுவியபிறகு, மயிற்றோகையும் உழிஞைத் (கொற்றான்) தளிருமாய்ச் சேர்த்துத்தொடுத்தமாலைசூட்டிப் பின்பு மந்திரங்கள்சொல்லி, அம்முரசினை அதிஷ்டித்துநிற்கும் தெய்வத்தைப்பூஜித்து, அக் கடவுட்கு இரத்தமும் நறவுங்கலந்த பயங்கரமான பிண்டத்தை (சோற்றுண்டையை) மந்திரபூர்வகமாகப் பலியிடுவது மரபு. அந்தக்குருதிப்பிண்டத்தைக்கண்டு கொடியகண்ணையும் முருக்கநெற்றுப்போன்ற விரலையுமுடைய பேய்மகளும் அஞ்சி யகல்வாள். எறும்புங்கூட அதனை மொய்ப்பனவல்ல. காக்கையும் பருந்துமே அப்பலியைத்தீண்டி உண்ணும். அவை உண்டால்தான்பலியிட்ட அரசனுக்குப் பின்நிகழும்போரில் வெற்றியுண்டாமெனபதற்கு ஒரு நன்னிமித்தமெனப்படும். அம் முரசுறைகடவுளே தன்ஆணையாற் பின்விளையும்வெற்றிக்குச் சூசகமாகத் தன்பலியை உண்ணும்படி அக் காக்கையினையும் பருந்தினையும் ஏவுமென்பது சித்தாந்தம்.

இப்படிப் பலியிடுங்காலத்து அவ்வீரமுரசம் மிகஉரக்க அடிக்கப்பெறும். அதன் தொனிகேட்க யார்க்கும் பேரச்சந்தோன்றும். இக் காலத்தில் வீரரும் படைத்தலைவரும் வஞ்சினங்கூறி அப் பலியினை எறிவார்கள். இவற்றை,

> "மாசற விசித்த வார்புறு வள்பின்
> மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
> யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
> பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
> குருதி வேட்கை உருகெழு முரசம், மண்ணி" (புறம்-50.)

என்பதனாலும்,

"கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கும் மந்திரத்து
அருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோ னேந்திய அரும்பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
எறும்பும் மூசா இறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்—முரசு"

(பதிற்-30-ம் உரையும்) என்பதனாலும் அறிக. இதேகாலத்தின் (அதாவது பலியிட்டு அப்பலியைக் காக்கையும் பருந்தும் உண்ணுங் காலத்து) பகையரசரதுநாட்டிற் புதுப்புள்வந்துசேரப் பழம்புட்கள் அகன்றுபோமாம். இதனைப், 'புதுப்புள் வரினும் பழம்புட் போகினும், விதுப்புற வறியா ஏமக் காப்பினை' (புறம்-20) என்பதனாலும், 'உட் பகை ஒருதிறம் பட்டெனப் புட்பகை' (புறம்-68) என்பதனாலும் அறிக. நாண்மீனை (ஜன்மநக்ஷத்திரத்தை) வீழ்மீன் நலிவதும் உண்டென்ப. அதனை 'ஆடியல் அழற்குட்டத்து' என்னும் 229-ம் புறப் பாட்டான் அறிக. இவையேயன்றி உன்னம் எனப்படும் மரத்துப் பூவும் அப் பகைவர் நிமித்தம்பார்த்தவழிக் கரிந்துகாட்டுமாம். இதனைப் 'புன்கால் உன்னம் சாய' என்பதனாலும், 'உன்னஞ்சாயவென்றது தன்னொடுபொரக்கருதுவார் நிமித்தம்பார்த்தவழி அவர்க்கு வென்றியின்மையின், கரிந்துகாட்ட' என்னும் அதன் உரையாலும் அறிக. (பதிற்-40).

இவ்வாறெல்லாம் மண்ணிப் பீலிசூட்டிப் பலியிட்டு நிமித்தம் பார்த்து 'வாளும்குடையும்' மயிர்க்கண்முரசும் *நாளோடுபெயர்த்து'ப்

---

* நாளொடுபெயர்த்தலாவது - 'வாளும் குடையும் முரசும் பெயர்த்தல்-வாள்நாட்கோள், குடைநாட்கோள், முரசுநாட்கோள் என்பன. இவை நாட்கொண்டுபெயர்தல். இவற்றுள் வாள்நாட்கோடல் 'செற்றார்மேற் செலவமர்ந்து கொற்றவாள் நாள்கொண்டன்று'..........முரசுகோடலென்பது 'மாசறவிசித்த........சங்கிதுசெயலே' (சிலப். இந்திர. அடி-91, 92-உரை.

பகைப்புலஞ்சென்றவேந்தன் மாற்றானது வீரமுரசத்தைவென்று கொணர்வதுதான் போரில் முழுதும் வெற்றிபெற்றதற் கடையாளமாகும். இதனை 'அருஞ்சமம் சிதையத்தாக்கி முரசமொடு ஒருங்கு அகப்படேஎனாயின்' (புறம்-72) என்பதாலும் 'இருபெருவேந்தரையும் உடனிலைவென்று, முரசுங்குடையும் கலனுங்கொண்டு' (பதிற்-8-ம் பத்துப்பதிகம்) 'மோகூர் மன்னன் முரசங்கொண்டு' (ஷை 5-ம் பத்து 4-ம்பாட்டு) என்பதனாலும், அரசுபட அமருழக்கி, உரைசெல முரசுவெளவி' (புறம்-26) என்பதனாலும் அறிக. மற்றும் இவ் வீர முரசம் நீராட்டப்பெறுமலும், குருதிப்பலியூட்டிப் பூசிக்கப்பெறுமலும் வறிதேகிடக்குமாயின் அஃது அரசருக்கு இழுக்குத்தருமாம். இதனை, (பதிற்றுப்பத்து 31) 'துளங்குகுடி விழுத்திணை திருத்தி *முரசுகொண்டு' என்பதன் உரையால் உய்த்துணர்க. யாம் இதுகாறும் கூறிப்போந்தவற்றாற் பண்டைக்காலத்துவேந்தரது வேட்கையையும், நீதிசெலுத்தும் முறையையும், கொடைக்கடனிறுக்கும் ஆண்மையையும் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

வெ. இராஜகோபாலன்,
கம்பர்விலாசம், மைலாப்பூர்.

---

*'முரசுகொண்டு என்றது சிலகாலத்துப் பயன்கொள்வாரின்மையிற் பண்ணழிந்துகிடந்த பழமுரசினைத் தான்தோன்றி அதன் . அழிவுதீர்த்து அதன்பயன்கொண்டென்றவாறு' என்பது பழைய உரை.

# காவேரிபாக்கத்துச்சாஸனம்.

—(:o:)—

தமிழகத்தைமுழுதும் ஏகசக்கிராதிபதியாயாண்ட முதல் இராஜராஜன் என்னும் வேந்தனுக்கு, சிவபாதசேகரன், மும்முடி சோழன், அருமொழிதேவன், நித்தவிநோதன் என்னும் பற்பல மறு பெயர்களுண்டாயிருந்தன. அவற்றுள், ஜனநாதன் என்பதும் ஒன்றென்றுசொல்லத் தேவையான ஆதாரங்கள் கிடைத்திலவெனினும் அஃது இவ்வரசன்பெயரே என்று ஒருவாறு மனதிற்குப் புலப்பட்டுக்கொண்டிருந்தது. இதுகாறுங்கிட்டாத அவ்வாதாரமும் அடியிற் பதித்துள்ள காவேரிபாக்கத்துச் சாஸனத்துள், இப்பொழுது காணக்கிடக்கின்றது. உடைந்துபோன ஒரு சிறுகல்லின்புறத்து எழுதப்பட்டு, லக்ஷியஞ்செய்வாரின்றி ஏரிக்கரையிற் கிடக்கின்றது. அழகான கிரந்தாக்ஷரங்களில் எழுதியுள்ளது; முதலிலும் கடைசியிலும் கல் உடைந்துபோனபடியால் இவ்விரு அற்றங்களிலும் உள்ள எழுத்துக்கள் கிடைக்காமற்போய்விட்டன. ஆகினும் ஒருபடியாய்ச் சாஸனத்தின்தாத்பரியத்தைக் கிரகிக்கச் சாத்தியமாயிருக்கிறது. சாஸனத்திற் சொல்லப்பட்ட விஷயத்தைச் சுருக்கமாக அடியிற் சொல்லுவோம்.

சோழமண்டலத்தில் உம்பளநாடென்று ஒரு நாடுண்டு. அந்நாட்டில் நடார் என்று ஓரூர் உண்டு. அவ்வூரிற் செம்பியனும்பள நாட்......மூவேந்தவேளானென்னும் பட்டப்பெயர்தரித்தவனும் சாத்தன் என்ற இயற்பெயருடையவனுமான அரசர்களாற் சன்மானிக்கப்பட்ட ஒருவனிருந்தான். இவன் தம்பியாகிய மும்முடிசோழ உம்பளநாட்டு மூவேந்தவேளானென்பவனுக்கு அப்பட்டப்பெயர் ஜனநாததேவனாற் கொடுக்கப்பட்டது; அதாவது, முதல் இராஜராஜதேவனால்

அளிக்கப்பட்டது. இவ்விருவர்களில் மூத்தவனாகிய சாத்தனுக்கு இரண்டுமக்களிருந்தனர்; அவர்களில் மூத்தவன் மறைக்காடனாகிய பராந்தகப்பல்லவரையன். இளையவன் ஆதித்தனாகிய பராந்தகப் பல்லவரையன். ஆதித்தன், மும்முடிசோழதேவனுடைய பிரதான மந்திரிஸ்தானத்தை வகித்துவந்தான். இவன் லோகோபகாரமாக ஏதோ ஒரு நற்செய்கை செய்ததாகத் தெரியவருகிறது. மழையைப் பற்றிச் சொல்லத்தொடங்கிய சாஸனம், முறிந்துபோனதினால், இன்னதுதான் கூறப்புகுந்ததென்று ஊகிக்கமுடியவில்லை. மழை வளர்தவறினும் மாந்தர்க்கு நீர்வளங்குன்றாதிருத்தற்பொருட்டுக் காவேரிபாக்கத்துப் பெரியஏரியைக் கட்டுவித்தானோவென்று சம்சயிக்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயம் எப்படியாயினுமாகட்டும்; முதல் இராஜராஜன்பெயர்களுள், மும்முடிசோழன், ஜனநாதன் என்பனவு மடங்கியுள்ளனவென்பது இச்சாஸனத்தால் நன்குபுலப்படும்.

இச்சாஸனம், ஏழு சுலோகங்களால் எழுதப்பட்டுள்ளது. இவை பல விருத்தங்களால் இயற்றப்பட்டுள்ளன.

## சாஸனம்.

1......[illegible]......

2......[illegible]॥—(1) [illegible]
[illegible]......

3......[illegible]
[illegible]॥—(2) [illegible]...(3)

4......[illegible]
[illegible][illegible]......

---

1. அநுஷ்டுப்.
2. த்ருதவிளம்பிதம்.
3. "[illegible]" என்றிருக்கலாம்.

5......(4) 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌤𑍍 𑌨𑌾𑌥𑌿𑌪𑍇 ॥ — (5) 𑌸𑌸𑍍𑌯
𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌪𑌰𑌿𑌷𑌦𑍍𑌵𑌰𑌨𑌾𑌥𑌸𑍍𑌯...(6)

6......[𑌵𑍇]𑌦𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌧𑌿 𑌚 𑌸𑌦𑌾𑌪𑍍𑌰𑌶𑌸𑍍[𑌤]𑌤 𑌜𑌨𑌨𑌾𑌯𑌕𑍇
𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌪𑌾𑌦 ॥—(7) 𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮......(8)

7......[𑌵𑌿]𑌜𑍇𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 [1*] 𑌵𑍀𑌰𑌃 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮
𑌶𑍌𑌰𑍍𑌯𑍌𑌦𑌾𑌰𑍍𑌯𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌃॥ (9)𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 (10)

8......[𑌸]𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌤𑍍 𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌹𑌿𑌤𑌕𑌾𑌮
𑌕𑌾𑌰𑌕𑍋𑌟𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌾𑌦......

9......𑌨𑌾𑌃 𑌕𑍍𑌰𑍁𑌤𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌤𑍍 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌵𑌾𑌨𑍍
𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌮𑌨𑍍𑌤𑌪𑌰𑌿𑌷𑌦𑍍[𑌯]......

10......𑌤𑌃 𑌸𑌾𑌮𑌨𑍍𑌤𑌸𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵[𑌯𑌂 11]......12 𑌸𑌦𑍍𑌵𑍃𑌤𑌾
𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌶𑍌𑌰𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌸𑌾𑌮𑌨𑍍𑌤𑌿......

*து. அ. கோபிநாதராவ் எம். ஏ.,*

---

4. "மூவேஜஞவேஜா" என்றிருக்கும்.
5. இந்திரவஜ்ரா.
6. "ஜ்ஞவேஜஞவேஜா" என்றிருக்கலாம்.
7. ஜீதி.
8. "ஸ்ரீமாநு ஜெஜெறக்காட" என்றிருக்கலாம்.
9. அநுஷ்டுப்.
10. "வாதாவ" என்றிருக்கலாமோவென்று சம்சயம்.
11. "ஷீவநுவகேம்" என்றிருக்கலாம்.
12. சார்த்தூலவிக்ரீடிதம்.

# பிழை திருத்தம்.

---

செந்தமிழ்த் தொகுதி-௧௪ பகுதி-௧௦-ல் ௪௧௪-ம்பக்கத்து 10, 12-ம்வரிகளில் நெடுங்கிள்ளி என்றிருப்பதை நெடுமுடிக்கிள்ளி என்றும், ஷ தொகுதி ௧௧-ம்பகுதி ௪௨௦-ம்பக்கம் ௭ வதுவரியில் மொன்பதிற்றிரண்டிற் என்றிருப்பதை மொன்பதிற்றிரண்டினிற் என்றும், ௪௩௪-ம்பக்கம் ௧௯-வதுவரியில் தமிழ்நாடுகளக்காலத் திருந்ததென்று என்றிருப்பதை தமிழ்நாடுகளக்காலத்திருந்தன வென்று என்றும், ௪௩௫-ம்பக்கம் ௧௪-வதுவரியில் பாண்டியனுடைடைந் ததும் என்றிருப்பதைப் பாண்டியநாடடைந்ததும் என்றும் திருத்திக் கொள்க.

பத்திராதிபர்

---